# தக்கார் குரல்

உள்ளது உள்ளபடி

TNBIL/25/A2396

மலர் 1 | இதழ் 6 | மார்ச் 2026 | மாத இதழ் | விலை ரூ.25
Volume-1 | Issue 6 | March 2026 | Monthly Magazine | Price RS.25



## பழிதீர்க்கும் ஈரான்

## அமெரிக்க தளத்தை தாக்கிய முதல்தேசம்



## விவாகரத்து கோரும் விஜய் மனைவி

### பின்னணியில் அரசியலா?



## மதுராந்தகம் தொகுதி அசத்தும் எம்எல்ஏ

– நேரடி கள ரிப்போர்ட்

# தேர்தல் களம் 2026

## மக்களோடு மக்களாக தக்கார் குரல்
## தமிழகமெங்கும் ஒலிக்கும்..!!



தக்கார்

வெளியீட்டாளர் - ஆசிரியர்
**S.யூசுப் பாஷா**

வழிகாட்டுதல் குழு
**ஜோதிமணி,** மேனாள் நீதியரசர் உயர் நீதிமன்றம்
**ராஜதுரை**, மூத்த பத்திரிகையாளர்
**கே.ராஜேந்திர பிரபு,** மூத்த பத்திரிகையாளர்
**ஆஷிஸ்**, சட்ட ஆலோசகர்

பொறுப்பாசிரியர் **S.சஞ்சய்காந்தி**

உதவி ஆசிரியர்கள்
**விஜயலட்சுமி பின்லாந்து**
**ஜோதி நரசிம்மன், S.சக்தி பாரதி**

சென்னை நிருபர்கள்
தலைமை நிருபர் **பாலாஜி**
தலைமை புகைப்பட கலைஞர் **சதீஷ்**

மாவட்ட செய்தியாளர்கள்
சென்னை - **M.ஹர்ஷத்**
உயர் நீதிமன்றம் **க.முகேஷ்**
புதுச்சேரி - **ஏ.கே.ஆர்**
காஞ்சிபுரம்- **கவி பாலா,**
**ராஜா** புகைப்படக்கலைஞர்
இராணிப்பேட்டை - **ராஜீவ்**
மதுரை - **கோபி கிருஷ்ணன்**
கொடைக்கானல் - **கணேசன்**
திருச்சி - **புவனேஸ்வரி**
கோவை - **அருண் சங்கீத்**
ராமநாதபுரம் - **கவின்**
போடி - **விஜய்**
இணையதள ஆசிரியர்- **தீப்நாத்**
விஷுவல் எடிட்டர் - **E.காலித்**
டிஜிட்டல் மார்க்கெட்டிங் - **யுகேந்திரன்**

வடிவமைப்பு
**பாரதி டிசைனர்ஸ்,**
மதுரை

மின்னஞ்சல்
thakkaarkural@gmail.com
Cell: 75500 50088
செய்திகளை உடனுக்குடன் அறிய உங்கள் போனில் ThakkaarKural App-ஐ டவுன்லோடு செய்யுங்கள்
இணையதள முகவரி
www.thakkaarkural.com


# ஈகோ, இழுபறி, சமரசம் கூட்டணியில் சாதித்தது திமுக

பாஜக-அதிமுக கூட்டணி ஜெல்லாகுமா என அனைவரும் கேள்வி எழுப்பிய நிலையில், அந்த நிலை திடீரென திமுக கூட்டணிக்கு ஏற்படும் என யாரும் எதிர்பார்க்கவில்லை. திடீரென தொகுதிப் பங்கீடு பற்றி பேச குழு அமைத்தது காங்கிரஸ். தொடர்ந்து திமுகவினரை நேரடியாகவும் மறைமுகமாகவும் விமர்சித்து வந்தனர் சில காங்கிரஸ் எம்.பி.க்கள். திமுகவில் சில மாவட்ட தலைவர்களும் பதிலடி தந்தனர். ராகுலின் நண்பர் பிரவீன் சக்ரவர்த்தி விஜயை சந்தித்து பேசியது எரியும் தீயில் எண்ணெய் ஊற்றியது.

இனி திமுக கூட்டணியில் காங்கிரஸ் இருக்குமா என்கிற அளவுக்கு கடந்த ஒரு மாதமாக தீவிரமாக பேசப்பட்டு வந்தது. தொகுதி எண்ணிக்கையை தருவதிலும் விட்டுக் கொடுப்பதிலும் இரு கட்சிகளிடையே கடும் ஈகோ நிலவியது. இதனால் பேச்சுவார்த்தையில் இழுபறி ஏற்பட்டது. எது வேண்டுமானாலும் நடக்கலாம் என்பதால், தற்காப்பு நடவடிக்கையாக தேமுதிகவை கூட்டணிக்குள்ளும், ஓபிஎஸ்ஸை கட்சிக்குள்ளும் கொண்டு வந்தது திமுக.

இறுதியில் பேச்சுவார்த்தையை முடிவுக்கு கொண்டு வர ப.சிதம்பரத்தை களமிறக்கியது காங்கிரஸின் டெல்லி தலைமை. திமுக தலைவரை அவரது இல்லத்துக்கே சென்று சுமார் ஒருமணி நேரம் பேச்சுவார்த்தை நடத்தி நிலைமையை கட்டுக்குள் கொண்டு வந்தார் ப.சிதம்பரம். இரு கட்சிகளின் தலைவர்களும் மனம்விட்டு பேசியது சுமூக நிலையை கொண்டு வந்தது. காங்கிரஸுக்கு ஒரு ராஜ்யசபா சீட் மற்றும் 28 பேரவைத் தொகுதிகளை ஒதுக்கியது திமுக தலைமை. இறுதியில் இதற்கு உடன்பட்டது காங்கிரஸ்.

அரங்கேறியவற்றைப் பார்த்தால் சில விஷயங்கள் நமக்கு சொல்லாமல் புரிகின்றன. இரு கட்சி தலைமைகளுக்கும் இடையே நிலவிய நம்பிக்கையின்மைக்கு காரணம், தொகுதி பங்கீடு அல்ல. அதையும் தாண்டிய ஏதோ ஒன்று. அது இரு தலைவர்களுக்கு மட்டுமே வெளிச்சம். திமுகவின் நம்பகத்தன்மை மீது ராகுல் சந்தேகம் கொண்டதே இதற்கு காரணம் என கிசுகிசுக்கிறார்கள்.

இது மாநில பேரவைக்கான தேர்தல். அதாவது திமுகவுக்கு முக்கியத்துவம் வாய்ந்த தேர்தல். அதில், தனது முக்கியத்துவத்தை திமுகவுக்கு உணர்த்த நினைத்துள்ளது காங்கிரஸ். அதாவது, காங்கிரஸை அவ்வளவு இலகுவாக எடைபோட வேண்டாம் என்பதே திமுகவுக்கு காங்கிரஸ் உணர்த்த நினைத்த செய்தி. அதை செய்தும் காட்டியுள்ளது எனலாம். எனினும் நேர்த்தியான அரசியல் சாதுர்யத்துடன் செயல்பட்டு கூட்டணியை தக்கவைத்தது மு.க.ஸ்டாலினின் சாதனை என்றே குறிப்பிடலாம்.

– ஆசிரியர்

# அமெரிக்கா – இஸ்ரேல் போரால் வளைகுடாவில் பதற்றம்



- கமேனி கொலைக்கு பழிதீர்க்கும் ஈரான்
- கச்சா எண்ணெய் விலை உயரும் அபாயம்

ஈரான் மீது இஸ்ரேலும், அமெரிக்காவும் போரைத் தொடங்கி உள்ளன. இதற்கு பதிலடியாக ஈரான், இஸ்ரேலையும், அமெரிக்காவின் நட்பு நாடுகளையும் அங்குள்ள அமெரிக்க ராணுவ தளங்களையும் குறிவைத்து தாக்கி வருகிறது.

அமெரிக்க இஸ்ரேல் கூட்டு தாக்குதலில் ஈரான் உயர்மட்ட தலைவர் அயதுல்லா அலி கமேனி கொல்லப்பட்டுள்ளார். இதனால் மத்திய கிழக்கு ஆசியாவில் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது. ஈரான் மீது அமெரிக்காவும் இஸ்ரேலும் கடுமையான தாக்குதலை நடத்தி






கமேனிக்கு அஞ்சலி செலுத்த கூடிய மக்கள் கூட்டம்

வருகின்றன. ஈரான் நூற்றுக்கணக்கான பாலிஸ்டிக் ஏவுகணைகளை செலுத்தி பதிலடி தருவதால் போர்ப் பதற்றம் உச்சத்தை தொட்டுள்ளது.

### என்ன கேட்கிறது அமெரிக்கா?

இந்த போருக்கான உடனடி காரணம் என்ன? ஈரானின் அணு ஆயுத முயற்சிகளை முடக்கும் வகையில் பேச்சுவார்த்தை நடைபெற்றுவருகிறது. மூன்றாம் கட்டப் பேச்சுவார்த்தையின்போது, தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ள முடியாது என ஈரான் உறுதியாக இருந்ததால், இந்த தாக்குதலை நடத்துவதாக ட்ரம்ப் தெரிவித்திருக்கிறார்.

அமெரிக்காவும், இஸ்ரேலும் இணைந்து ஈரான் மீது தாக்குதல் நடத்தியிருப்பதாக அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளன. பதில் தாக்குதலாக, ஈரானின் IRGC (Islamic Revolutionary Guards) படை, இஸ்ரேலை நோக்கி ஏவுகணைகளை செலுத்தி வருகிறது. இஸ்ரேல் மட்டுமின்றி, பஹ்ரேன், குவைத், கத்தார், ஐக்கிய அரபு அமீரகம், ஜோர்டான் ஆகிய நாடுகளில் உள்ள அமெரிக்காவின் படைத்தளங்களை நோக்கியும் ஈரான் ஏவுகணைத் தாக்குதலை நடத்தி வருகிறது. ஆனால், பஹ்ரேன் தவிர்த்து, மற்ற நாடுகள் ஏவுகணைகளை இடைமறித்து அழித்திருப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.



கமேனி

பஹ்ரேனில் உள்ள அமெரிக்க கடற்படையின் 5th Fleet மீது ஈரான் தாக்குதல் நடத்தியிருப்பதாக தகவல் வெளியானது. வளைகுடா நாடுகளும் இந்த போரில் இழுக்கப்பட்டிருப்பதால், இது மிகப் பெரும் போராக மாறும் சூழல் ஏற்பட்டுள்ளது.

ஈரான் அணு ஆயுதம் தயாரிக்கும் முயற்சியில் இருப்பதாக கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக




**ஹொர்முஸ் நீரிணை**

இஸ்ரேல் குற்றம்சாட்டி வருகிறது. ஆனால், ஈரான் இதை தொடர்ந்து மறுத்து வருகிறது. அணு சக்தி என்பது ஈரானின் உரிமை என்றும், அதை மக்கள் நலத் திட்டங்களுக்கு பயன்படுத்துவதை யாரும் தடுக்க முடியாது என்றும் ஈரான் தொடர்ந்து கூறி வருகிறது.

கடந்த 2025 ஜூன் மாதம், ஈரான் தங்கள் அணுசக்தி திட்டத்தைக் கைவிட வேண்டும் என வலியுறுத்தி, பேச்சுவார்த்தைக்கு அமெரிக்கா அழைத்தது. அந்த பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கும்போது, “ஈரான் அணு ஆயுதம் தயாரிக்கும் நிலையை எட்டிவிட்டது. அதற்கான யுரேனியம் செறிவூட்டல் இன்னும் சில நாட்களில் முழுமை அடையப் போகிறது. இது இஸ்ரேலுக்கும், மத்திய கிழக்கில் உள்ள மற்ற நாடுகளுக்கும் அச்சுறுத்தல்” எனக் கூறி, ஈரான் மீது தாக்குதலை தொடங்கியது இஸ்ரேல். இதனால், பேச்சுவார்த்தை பாதியிலேயே முடிந்தது.

பதிலுக்கு ஈரானும் தாக்குதல் நடத்தவே, அந்த போர் 12 நாட்கள் நீடித்தது. கடைசி நாளில், அமெரிக்கா தன்னுடையை விமானப் படையை திரட்டிக் கொண்டு வந்து, பி2 பாம்பர்கள் என்ற சக்தி வாய்ந்த குண்டுகளை, நிலத்துக்கு அடியில் செயல்படும் ஈரானின் முக்கிய அணு சக்தி மையங்கள் மீது வீசி தாக்கியது. இதில் ஈரானின் அணு சக்தி திட்டம் முற்றிலும் அழிக்கப்பட்டதாக அமெரிக்க அதிபர் ட்ரம்ப் மார்தட்டிக் கொண்டார்.

8 மாதங்கள் கடந்த நிலையில், ஈரான் மீண்டும் அணு சக்தி திட்டத்தை தொடங்க முயற்சிப்பதாக அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் குற்றம்சாட்டினார். எனவே, ஈரான் உடனடியாக அணுசக்தி பேச்சுவார்த்தைக்கு வரவேண்டும்; அப்படியில்லை என்றால், ஈரான் மீது தாக்குதல் நடத்துவோம், என ட்ரம்ப் அறி வித்தார். அதற்கு ஏற்ப, அமெரிக்க ராணுவ, கடற்படை, விமானப்படையை ஈரானை சுற்றி நிலைநிறுத்தினார்.

அமெரிக்காவின் மிகப்பெரிய விமானம் தாங்கி போர்க் கப்பல்களான, யூ.எஸ்.எஸ் ஆபிரகாம் லிங்கன், யு.எஸ்.எஸ். ஜெரால்டு ஆர் போர்டு ஆகியவை ஈரானை சுற்றிய கடல் பகுதிகளில் நிலை நிறுத்தப்பட்டன. அமெரிக்காவின் சக்திவாய்ந்த போர் விமானங்களான F35, F22 ஆகியவை வளைகுடாவில் உள்ள அமெரிக்காவின் விமானப் படைத்தளங்களில் நிலை நிறுத்தப்பட்டன.

இதற்கு இடையில் ஓமன் மத்தியஸ்தம் செய்ய, அமெரிக்கா ஈரானுக்கு இடையே பிப்ரவரி மாதம் மட்டும் 3ம் கட்ட பேச்சுவார்த்தை நடந்தது. 3ம்

கட்ட பேச்சுவார்த்தை ஜெனிவாவில் பிப்.26ம் தேதி நடந்து முடிந்தது. ஒவ்வொரு கட்ட பேச்சுவார்த்தையும் நல்ல முன்னேற்றத்தை நோக்கித்தான் போவதாக, அமெரிக்காவும், ஈரானும் தெரிவித்தனர். இருப்பினும் இறுதி முடிவு எட்டப்படவில்லை.

**அமெரிக்காவின் 3 வலியுறுத்தல்கள்!**

அமெரிக்கா 3 விஷயங்களை முக்கியமாக வலியுறுத்தியது. 1. ஈரான் அணு சக்தி திட்டத்தை முற்றிலும் கைவிட வேண்டும். 2. ஏவுகணைத் திட்டங்களையும் முற்றிலும் கைவிட வேண்டும் 3. மத்திய கிழக்கில் இயங்கி வரும் ஆயுதக் குழுக்களான, ஹெஸ்புல்லா, ஹெவ்திக்கள், ஹமாஸ், சிரியாவின் ஆயுதக் குழுக்களுக்கு பணம் உள்ளிட்ட ஆதரவு கொடுப்பதை ஈரான் நிறுத்திக் கொள்ள வேண்டும். இவை மூன்றையும் ஈரான் ஏற்க வேண்டும் என்று அமெரிக்கா கேட்கிறது.

ஆனால், ஈரான் இதை முழுமையாக ஏற்கவில்லை. அணு சக்தி திறனை குறைப்பது பற்றி மட்டுமே ஈரான் பேச ஒப்புக் கொண்டது. மற்றவற்றைப் பற்றி பேசக் கூட ஈரான் தயாராக இல்லை. மூன்றாம் கட்டப் பேச்சு வார்த்தையிலும் தன் நிலைப்பாட்டை மாற்ற முடியாது என ஈரான் உறுதியாக இருந்ததால், இந்த தாக்குதலை நடத்துவதாக ட்ரம்ப் தெரிவித்திருக்கிறார்.

அணுசக்தித் திட்டம், பிராந்திய ஆதிக்கம் மற்றும் தலைமை மதகுரு கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, வளைகுடாவில் போர்ப் பதற்றம் அதிகரித்துள்ளது. இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா, ஈரானின் அணுசக்தி நிலையங்கள் மற்றும் ராணுவ முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் மீது தாக்குதல் நடத்தி வருகின்றன, இதனால் 1,500க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

இதனால், அந்நாட்டில் கடுமையான பொருளாதார நெருக்கடி, நீர் மற்றும் மின்சாரத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. கடுமையான விலைவாசி உயர்வு, பணவீக்கம் மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாட்டால் மக்கள் கடும் அவதியடைந்து வருகின்றனர்.

ராணுவ மற்றும் பொருளாதார நெருக்கடிகளால் சூழப்பட்டுள்ள ஈரானில், மக்கள் கொந்தளிப்பு அடைய வேண்டும் என்பதே அமெரிக்க – இஸ்ரேல் நடவடிக்கையின் நோக்கமாக உள்ளது. இதன்மூலம் ஆட்சி மாற்றம் ஏற்பட வேண்டும் என அந்நாடுகள் எதிர்பார்க்கின்றன. மத அடிப்படையிலான ஆட்சி அகற்றப்பட்டு பழைய மன்னராட்சியையோ அல்லது ஜனநாயக ஆட்சியையோ ஈரானில் ஏற்படுத்த வேண்டும் என அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் விரும்புகின்றன. ஆனால், மறைந்த கமேனிக்கு அஞ்சலி செலுத்த கூடிய கூட்டம், அந்த எதிர்பார்ப்பு கானல்நீராகும் என்பதையே உணர்த்துகின்றன. அதனால்தானோ என்னவோ அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் பீட்டர் ஹெக்சேத், இது ஆட்சி மாற்றத்துக்கான யுத்தம் அல்ல என பல்டி அடித்துவிட்டார்.



போர் காரணமாக ஹெர்முஸ் நீரிணையை மூடிவிட்டது ஈரான். இதனால் நூற்றுக்கணக்கான வர்த்தக எண்ணெய் கப்பல்கள் நடுக்கடலில் தத்தளிக்கின்றன. சவூதி உள்ளிட்ட நாடுகளின் எண்ணெய் வயல்களை குறிவைத்து தாக்குகிறது ஈரான். இதனால் பல எண்ணெய் கிணறுகள் பற்றி எரிகின்றன.

இதன்தொடர்ச்சியாக கச்சா எண்ணெய் விலை உயர்ந்து வருகிறது. போர் தொடர்ந்தால் இது உலக அளவில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். எண்ணெய் விலை உச்சத்தை தொட வாய்ப்பு இருக்கிறது.




# விவாகரத்து கேட்கும் சங்கீதா விஜய்

## அரசியல் பின்னணி காரணமா?

நடிகரும், தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவருமான விஜய் உடனான 26 ஆண்டு கால திருமண பந்தத்தை விட்டு பிரியும் வகையில் விவாகரத்து கேட்டு, அவரது மனைவி சங்கீதா பிப்ரவரி மாதம் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

விஜய் சங்கீதா திருமணம், கிறிஸ்துவர் இந்து இடையேயான திருமணம் என்பதால் சிறப்புத் திருமணச் சட்டத்தின் கீழ் விவாகரத்து கேட்டு செங்கல்பட்டு மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு விசாரணைக்கு ஏற்கப்பட்டு, குடும்ப நல நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.

கணவர் விஜய், ஒரு நடிகையுடன் திருமணத்தை மீறிய உறவில் இருந்தது கடந்த 2021ம் ஆண்டு ஏப்ரல் மாதம் தெரியவந்ததில் இருந்து, மிகுந்த மன உளைச்சலில் இருப்பதாக விவாகரத்து மனுவில் வேதனையை வெளிப்படுத்தி உள்ளார் சங்கீதா. இதை கைவிட்டு குடும்பத்துடன் இருக்கும்படி விஜயிடம் பேச்சுவார்த்தை நடத்தியும் பலன் அளிக்கவில்லை; கடந்த 5 ஆண்டுகளாக ஒரே வீட்டில் வசித்தாலும் இருவரும் பிரிந்தே வாழ்ந்து வருவதாகவும் கூறியுள்ளார்.

சம்பந்தப்பட்ட நடிகை, விஜய்யுடன் இருக்கும் புகைப்படங்களைச் சமூக வலைதளங்களில் பதிவிடுவதும், அதை விஜய் கண்டிக்காததும் தனக்கும் குழந்தைகளுக்கும் சங்கடத்தை ஏற்படுத்தியதுடன், கண்ணியத்தையும் சீரழித்துள்ளதாக தெரிவித்துள்ளார். அந்த படங்களுக்கு விஜய் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை என்றும் குற்றம்சாட்டியுள்ளார்.

தங்களது திருமணத்தை ரத்து செய்து விவாகரத்து வழங்க வேண்டும்; வழக்கு முடியும் வரை அல்லது மாற்று வசதி செய்து தரும் வரை நீலாங்கரை வீட்டிலேயே வசிக்க அனுமதிக்க வேண்டும்; விஜயின் சமூக அந்தஸ்து, வருமானத்துக்கு ஏற்ப நியாயமான, நிரந்தரமான ஜீவனாம்சம் வழங்க உத்தரவிட வேண்டும்; என்ற கோரிக்கைகளுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மார்ச் மாதத்தில் விசாரணக்கு எடுத்துக்கொள்ளப்பட உள்ளது.

கணவர் விஜய், திருமணத்தை மீறிய உறவில் இருக்கும் நடிகை யார் என்று சொல்வதற்கு தயாராக இருப்பதாகவும், விவாகரத்து வழக்கில் பிரதிவாதியாக விஜய் மட்டும் இருக்கும் நிலையில், தேவைப்படும் சமயத்தில் பிரதான வழக்கில் அந்த நடிகையை இரண்டாவது பிரதிவாதியாக சேர்க்க தயார் என உத்தரவாதம் அளித்துள்ளார்.

தற்போதுள்ள விவாகரத்து வழக்கு விஜயின் தனிப்பட்ட வாழ்க்கையில் உருவெடுத்துள்ள விவகாரம் என்றாலும், சினிமா, அரசியல் என விஜயை பின்பற்றும் கோடிக்கணக்கான ரசிகர்களுக்கும், தொண்டர்களுக்கும் இந்த செய்தி அதிர்ச்சியை தந்துள்ளது. அதுவும் தேர்தல் காலகட்டத்தில் எழுந்துள்ள இந்த சிக்கலை அவர்கள் கவலையுடன் பார்க்கின்றனர். இன்னும் பலர் இந்த செயலுக்கு பின்னால் அரசியல் உள்நோக்கம் இருப்பதாகவும் விமர்சித்து சமூக ஊடகங்களில் பதிவிட்டு வருகின்றனர்.



# திமுகவில் இணைந்த ஓ.பி.எஸ்.

## அதிர்ச்சியில் தொண்டர்கள்

அதிமுகவின் முன்னாள் முதல்வரும், அக்கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளராக இருந்தவருமான ஓ.பன்னீர்செல்வம் திமுகவில் இணைந்தது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

அதிமுகவில் இருந்து நீக்கப்பட்ட ஓ.பன்னீர்செல்வம், அக்கட்சிக்கு உரிமைகோரி தேர்தல் ஆணையத்திலும் நீதிமன்றங்களிலும் பல்வேறு வழக்குகளை தொடர்ந்துள்ளார். எடப்பாடி பழனிசாமிக்கு எதிராக சட்டப் போராட்டம் நடத்தி வந்தார். இதனால், அதிமுக உடைந்துவிட்டதாக பேசப்பட்டு வந்தது. அதிமுக பலகூறுகளாக சிதறிவிட்டதாக பொதுவெளியில் அரசியல் விமர்சகர்கள் தொடர்ந்து கருத்துகளை முன்வைத்து வந்தனர்.

அதேநேரம், ஓபிஎஸ்ஸுக்கு பாஜக ஆதரவு இருந்து வந்தது. பாஜக மேலிட ஆசியுடன் அரசியல் செய்து வந்த அவர், 2024 லோக்சபா தேர்தலில் பாஜக ஆதரவுடன் ராமநாதபுரம் தொகுதியில் சுயேச்சையாக போட்டியிட்டு இரண்டாமிடம் பிடித்தார். அந்த தொகுதியில் அதிமுக மூன்றாம் இடத்துக்கு தள்ளப்பட்டது.

இந்நிலையில், பாஜக தலைமையிலான தே.ஜ.கூட்டணியில் அதிமுக மீண்டும் இணைந்தது. இதனால், அதிமுக பொதுச் செயலாளரான எடப்பாடி பழனிசாமியை எதிர்த்து அரசியல் செய்து வந்த முன்னாள் அதிமுகவினருக்கு நெருக்கடி ஏற்பட்டது. அவர்களது நிலை என்னவாகும்? அவர்களால் பாஜக அதிமுக கூட்டணியில் தொடர முடியுமா? என்ற கேள்விகள் எழுந்துவந்தன.

இதற்கிடையே, எடப்பாடி பழனிசாமியை துரோகி என வர்ணித்து வந்த அமமுக நிறுவனர் டிடிவி தினகரன் பாஜக அதிமுக கூட்டணியில் இடம்பிடித்தார். அவரை கூட்டணியில் சேர்ப்பதற்கு எடப்பாடி பழனிசாமி சம்மதம் தெரிவித்தார். நாங்கள் அனைவரும் ஒருதாய் பிள்ளைகள் என விளக்கம் அளித்தார் தினகரன்.

அடுத்ததாக இந்த கூட்டணியில் ஓபிஎஸ் மீண்டும் இணைவாரா என்ற கேள்வி நிலவி வந்தது. பாஜக கூட்டணியில் இடம்பெறவும், அதிமுகவில் மீண்டும் சேர்த்துக்கொள்ளவும்

கடும் முயற்சி செய்து வந்தார் ஓபிஎஸ். ஆனால், அவரது முயற்சிக்கு பலன் கிடைக்கவில்லை. அவருக்கு பாஜகவும் ஆதரவளிக்கவில்லை.

இதனால் ஓபிஎஸ் அணி கையறுநிலைக்கு சென்றது. அவரது அணியில் இருந்த மூத்த தலைவர்கள் அனைவரும் விலகினர். முன்னாள் அமைச்சர் வைத்திலிங்கம், மனோஜ் பாண்டியன் ஆகியோர் திமுகவில் ஐக்கியமாயினர். ஜேசிடி பிரபாகரன் தவெகவில் இணைந்தார். ஓபிஎஸ்ஸுக்கு அரசியல் ஆலோசனை வழங்கி வந்த பண்ருட்டி ராமச்சந்திரன் தனிக்கட்சி தொடங்கிவிட்டு விஜய்க்கு ஆதரவாக கருத்து தெரிவித்து வருகிறார்.


எனினும், மீண்டும் அதிமுகவில் இடம்பிடித்துவிட முடியும் என்று ஓ.பி.எஸ். தொடர்ந்து முயற்சித்து வந்தார். ஆனால், அவரது கடைசிகட்ட முயற்சியும் கானல்நீரானது. பாஜகவும் கைவிட்ட நிலையில், ஓபிஎஸ் நிலை திரிசங்கு சொர்க்கமானது. இதையடுத்து அவர் தனிக்கட்சி தொடங்கி தவெக கூட்டணியில் இணைவார், தனிக்கட்சி தொடங்கி திமுக கூட்டணியில் இணைவார் என பேசப்பட்டு வந்தது.

ஆனால், அனைத்தையும் பொய்யாக்கி, திமுகவிலேயே இணைந்துவிட்டார். ஓ.பன்னீர்செல்வம். தனது மகனும் முன்னாள் எம்.பி.யுமான ஓ.பி.ரவீந்திரநாத் உள்ளிட்ட ஆதரவாளர்களுடன் அறிவாலயத்துக்கு சென்று திமுகவில் ஐக்கியமானார்.

ஓ.பி.எஸ்ஸின் இந்த திடீர் முடிவு, அவரை நம்பிவந்த அதிமுக தொண்டர்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியது. ஒருசிலர் அவருடன் திமுகவில் இணைந்தாலும் வெல்லமண்டி நடராஜன் உள்ளிட்ட பலர் மீண்டும் அதிமுகவுக்கு திரும்பத் தொடங்கியுள்ளனர்.

ஜெயலலிதா சிறைக்கு சென்றபோதும், உயிரிழந்தபோதும் முதல்வராக்கப்பட்டவர் ஓ.பி.எஸ். அதிமுகவின், உச்ச பொறுப்பில் இருந்தவர். 2019, 2021 தேர்தல்களில் அதிமுக வேட்பாளர்களை அறிவிக்கும் விண்ணப்பங்களில் கையெழுத்திட்ட ஒருங்கிணைப்பாளராக திகழ்ந்தவர். அப்படிப்பட்டவர் அதிமுகவின் பரமவைரியான திமுகவில் இணைந்தது பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.







ஓ.பி.எஸ் என்பவரை அரசியலில் அடையாளம் காட்டியதும், பதவிகள் வழங்கி கௌரவித்ததும் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாதான். அந்த ஜெயலலிதா மீது வழக்கு தொடுத்து கைது செய்த கட்சியில் எப்படி ஓபிஎஸ்ஸால் இணைய முடிந்தது என்பதே சாதாரண அதிமுக தொண்டனின் ஆதங்கமாக உள்ளது. விசுவாசத்துக்காக அறியப்பட்ட ஓ.பி.எஸ்., விசுவாசமற்றவர் என்ற அதிமுகவினரால் தற்போது விமர்சிக்கப்படுகிறார்.

‘அதிமுகவில் கதவடைக்கப்பட்டதால் அவரது அரசியல் எதிர்காலம் என்னவாகும், அவருக்கு வேறுவழியில்லை’ என்று ஓபிஎஸ் ஆதரவாளர்கள் கூறினாலும், அதை ஏற்கும் மனநிலையில் தொண்டர்களும் இல்லை; சராசரி பொதுமக்களும் இல்லை. இவ்வளவு இருந்தும் ஏன் இந்த முடிவை எடுத்தார் ஓபிஎஸ்.

அரசியலையும் தாண்டி சில காரணங்கள் இருப்பதாக கூறுகிறார்கள். அரசியல் வாழ்க்கையில் அவரும், அவரது குடும்பத்தினரும் அனுபவித்து வந்த பலன்களை தொடரவும், அவற்றை பாதுகாக்கவும், திமுக என்ற கட்சி தேவைப்படுவதாக சொல்கிறார்கள். எது எப்படி இருந்தாலும், ஓபிஎஸ் மீதான நன்மதிப்பு வீழ்ச்சியடைந்திருக்கிறது.

அதை மாற்றிக்காட்டுவாரா ஓபிஎஸ்? அது முடியுமா? தேனி மாவட்ட மக்கள் அவரை ஏற்பார்களா? அனைத்து கேள்விகளுக்கும் விடை சொல்ல காத்திருக்கிறது 2026 சட்டப்பேரவைத் தேர்தல்.



# மைக்ரோ பிளாஸ்டிக் எனும் எமன்

பிறந்த குழந்தைகளின் தொப்புள்கொடியில் மைக்ரோ பிளாஸ்டிக் கண்டறியப்பட்டதாக வெளியான செய்தி அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதையடுத்து, சென்னை உயர் நீதிமன்றத்தில் வனம் மற்றும் விலங்குகள் பாதுகாப்பு தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்காக அமைக்கப்பட்ட சிறப்பு அமர்வின் நீதிபதிகள் என்.சதீஷ்குமார், டி.பரத சக்கரவர்த்தி ஆகியோர், தாமாக முன்வந்து பொது நல வழக்காக இதை விசாரணைக்கு எடுத்துள்ளனர்.

தாவரங்கள், விலங்கினங்கள், மனிதர்கள் மீது மைக்ரோ பிளாஸ்டிக்கின் பாதகமான தாக்கத்தை ஆழமாக ஆய்வு செய்வது குறித்த ஒரு திட்டத்தை வகுக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் விசாரிக்கப்பட்டு வரும் வழக்கில், நாட்டில் பிளாஸ்டிக் பயன்பாடு அதிகமாக இருப்பதை சுட்டிக்காட்டி, மைக்ரோ பிளாஸ்டிக்கின் பாதிப்பை ஆராயும்படி நீதிபதிகள் உத்தரவிட்டிருந்தனர்.

இதற்கு தமிழ்நாடு அரசு, மைக்ரோ பிளாஸ்டிக் விவகாரத்தில் ஆய்வு நடத்தும்படி சென்னை ஐஐடி யிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும், கர்ப்பிணிகளின் ஒப்புதலுடன் தொப்புள்கொடி மாதிரிகளை சேகரித்து ஆய்வு செய்ததில், பிஸ்பெனால் ஏ எனும் பிபிஏ செறிவு 0.43 மைக்ரோகிராம் முதல் 1.15 மைக்ரோகிராம் வரை இருப்பதைக் கண்டறிந்துள்ளதாகவும் தெரிவித்தது.

இதனால் அதிர்ச்சி அடைந்த நீதிபதிகள், ஒரு தாயின் தொப்புள்கொடியை கூட பிளாஸ்டிக் மாசுபடுத்துகிறது என்றால், இதை தீவிரமாக ஆராய வேண்டியதன் அவசியத்தை மத்திய, மாநில அரசுகளுக்கு அறிவுறுத்தினர்.

மத்திய சுகாதாரத் துறை தரப்பில் உணவு பொருட்களை பிளாஸ்டிக் பைகளில் பொதிந்து விற்பதற்கு வழிகாட்டு விதிகள் வகுக்கப்பட்டுள்ளதாகவும், பிளாஸ்டிக் நுண்துகள்களால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து லக்னோ, கொச்சி, பிலானி ஆராய்ச்சி நிறுவனங்கள் மூலமாக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஹிமாச்சல பிரதேசம், ராஜஸ்தான் உள்ளிட்ட மாநிலங்களில் வாட்டர் பாட்டில்களில் விற்கப்படும் குடிநீரிலிருந்தும் மாதிரிகள் சேகரித்து ஆய்வு செய்தபோது, அவற்றிலும் மைக்ரோ பிளாஸ்டிக் இருப்பது கண்டறியப்பட்டுள்ளதாகவும், பிளாஸ்டிக் பாக்கெட்களில் அடைத்து விற்கப்படும் உப்பு, சர்க்கரையிலும் மைக்ரோ பிளாஸ்டிக் இருப்பதாக தெரியவந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஆய்வுகளை விரைந்து முடிக்க அறிவுறுத்திய நீதிபதிகள், மனிதர்களுக்கு மட்டுமல்லாமல், விலங்குகளுக்கும் தீங்கை ஏற்படுத்தக்கூடிய பிளாஸ்டிக் துகள்கள் குடிநீர் பாட்டில்களில் கண்டறியப்பட்டுள்ளதால், அவற்றின் லேபிள்களில் எச்சரிக்கை வாசகங்கள் இடம்பெறச் செய்ய வேண்டுமென குடிநீர் பாட்டில் உற்பத்தி நிறுவனங்களுக்கு அறிவுறுத்தும் படி மத்திய அரசுக்கு உத்தரவிட்டனர்.


அன்றாட வாழ்வின் அங்கமாக ஒன்றி விட்ட பிளாஸ்டிகின் துகள்கள் குடிநீரில் தொடங்கி குழந்தையின் தொப்புள்கொடி வரை பரவியிருப்பது ஒருபுறம் அதிர்ச்சியை ஏற்படுத்தினாலும், பிளாஸ்டிக்கின் பயன்பாட்டை தவிர்க்க வேண்டிய சரியான தருணத்தை உணர்த்தியுள்ளது.

**க.முகேஷ்**, உயர் நீதிமன்றம்

# மதுராந்தகம் சட்டப்பேரவைத் தொகுதி

## ஒரு பார்வை






1957ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு செங்கல்பட்டு மாவட்டத்தின் முக்கியமான 7 தொகுதிகளில் ஒன்றாக திகழ்கிறது. தமிழ்நாட்டிலேயே அதிக தேசிய நெடுஞ் சாலைகள் கடந்து செல்லும் பகுதிகளில் ஒன்றாக இது குறிப்பிடப்படுகிறது. மாநிலத்தின் மிகப்பெரிய ஏரிகளில் ஒன்றான மதுராந்தகம் ஏரி மற்றும் உலகப் புகழ்பெற்ற வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம் ஆகியவை இத்தொகுதியின் அடையாளச் சின்னங்களாக உள்ளன.

மதுராந்தகம் நகரம், மதுராந்தகம் ஒன்றியம், அச்சரப்பாக்கம் ஒன்றியம், அச்சரப்பாக்கம் பேரூராட்சி மற்றும் கருங்குழி பேரூராட்சி ஆகியவை இந்தத் தொகுதியின் நிர்வாகப் பகுதிகளாகும். மொத்தம் 2,26,685 வாக்காளர்கள் உள்ளனர்.





அரசியல் வரலாற்றைப் பார்க்கும்போது, அதிமுக 6 முறை, திமுக 5 முறை, காங்கிரஸ் 1 முறை வெற்றி பெற்றுள்ளன. இதனால் இத்தொகுதி இரு திராவிடக் கட்சிகளுக்கும் முக்கியமான போட்டித் தளமாக இருந்து வருகிறது.

தற்போது இத்தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக அதிமுகவைச் சேர்ந்த மரகதம் குமரவேல் செயல்பட்டு வருகிறார். அவர் கட்சியின் மாநில மகளிர் அணி இணை செயலாளராகவும், செயற்குழு உறுப்பினராகவும் உள்ளார். கடந்த தேர்தலில் வட மாவட்டங்களில் அதிமுக பல இடங்களில் தோல்வியடைந்த போதும், மதுராந்தகத்தில் மட்டும் அவர் வெற்றி பெற்றது கட்சி தலைமையிடம் அவருக்கு தனி முக்கியத்துவத்தை பெற்றுத் தந்தது. எதிர்க்கட்சி எம்.எல்.ஏ.வாக இருந்தாலும் மக்கள் பணியில் சுணக்கம் காட்டாமல் தனது சொந்த செலவில் பல்வேறு நலத்திட்ட பணிகள் செய்துள்ளார்.

கடந்த 5 ஆண்டுகளாக தொகுதியில் மக்கள் தொடர்பு மற்றும் பிரச்சினை தீர்வு பணிகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார். வரவிருக்கும் தேர்தலிலும் மீண்டும் போட்டியிட அவர் விண்ணப்பித்திருப்பதுடன், சீட்







உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகின்றன.

மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதியில் அரசியல் மட்டுமல்ல, வளர்ச்சியும் பேசப்படுகின்றது. 2021 முதல் 2025 வரை எம்.எல்.ஏ மரகதம் குமரவேல் தலைமையில் பல கோடி ரூபாய் மதிப்பிலான பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

### அச்சரப்பாக்கம் பேரூராட்சி

சுமார் ரூ47.77 லட்சம் மதிப்பில் பள்ளிகளுக்கு பெஞ்ச்–மேசைகள், புதிய குடிநீர் திட்டங்கள், சாலை அமைப்பு, சிசிஜிகூஷி கேமராக்கள் போன்ற அடிப்படை வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

### அச்சரப்பாக்கம் தெற்கு ஒன்றியம்

ரூ3.38 கோடிக்கும் மேற்பட்ட பணிகள்: சிமெண்ட் சாலைகள், ஸிளி குடிநீர் திட்டங்கள், ஸ்மார்ட் கிளாஸ் அறைகள், அங்கன்வாடி கட்டிடங்கள், புதிய நியாய விலை கடைகள் உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சி திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

### அச்சரப்பாக்கம் வடக்கு ஒன்றியம்

ரூ2.49 கோடி மதிப்பிலான பணிகள்: பேருந்து நிறுத்தங்கள், சாலை அமைப்பு, பள்ளி கட்டிட வசதிகள், குடிநீர் மேல்நிலைத் தொட்டிகள், சமூக கூடங்கள் போன்ற பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

### மதுராந்தகம் நகரம்

ரூ66.92 லட்சம் செலவில் சிசிஜிகூஷி கேமரா அமைப்பு, குடிநீர் திட்டம், சாலை அமைப்பு, சிறுவர் பூங்கா, நியாய விலை கடை கட்டிடம் உள்ளிட்ட நகர்ப்புற மேம்பாட்டு பணிகள் செய்யப்பட்டுள்ளன.

### கருங்குழி பேரூராட்சி

ரூ38.80 லட்சம் மதிப்பில் பள்ளி கட்டிடம்,

**தற்போது இத்தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக அதிமுகவைச் சேர்ந்த மரகதம் குமரவேல் செயல்பட்டு வருகிறார். அவர் கட்சியின் மாநில மகளிர் அணி இணை செயலாளராகவும், செயற்குழு உறுப்பினராகவும் உள்ளார். கடந்த தேர்தலில் வட மாவட்டங்களில் அதிமுக பல இடங்களில் தோல்வியடைந்த போதும், மதுராந்தகத்தில் மட்டும் அவர் வெற்றி பெற்றது கட்சி தலைமையிடம் அவருக்கு தனி முக்கியத்துவத்தை பெற்றுத் தந்தது.**








மதுராந்தகம் எம்எல்ஏவின் செயல்பாடுகள் குறித்து பொதுமக்களிடம் கேட்டபோது அவர்கள் கூறியதாவது:

**மதுராந்தகம் சட்டமன்ற உறுப்பினர் உங்களுக்காக செய்தது என்ன?**

எங்கள் குடும்பத்தில் ஒருவராக பழகக்கூடிய எளிமையான பெண்மணி மரகதம் குமரவேல் இதைவிட என்ன வேண்டும்.

**மக்களின் அடிப்படை தேவையை பூர்த்தி செய்தாரா?**

எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்து கொண்டு அவருடைய தொகுதி நிதியிலிருந்து பல்வேறு திட்டங்களை செய்து இருக்கிறார்.

**மதுராந்தகம் மக்களின் நீண்ட நாள் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டது?**

குடிநீர் வசதி. பேருந்து நிலையம். பள்ளி கட்டிடம். ரேஷன் கடை ஆகியவற்றை எங்களுக்காக கொண்டு வந்திருக்கின்றார்.

**மரகதம் குமரவேலை நேரடியாக சந்திக்க வாய்ப்பு கிடைக்கிறதா?**

தொகுதி மக்களுடன் இயல்பாக பழகக் கூடியவர். நேரடியாக எப்போது சென்றாலும் அவரை பார்க்க முடியும். திருமண நிகழ்ச்சி, வீட்டின் துக்க நிகழ்ச்சியில் கண்டிப்பாக பங்கேற்கக்கூடியவர். கட்சி பாகுபாடின்றி பழகக் கூடியவர் மரகதம் குமரவேல்.

நியாய விலை கடை, நூலக கட்டிடம் போன்ற பொதுப்பயன்கட்டிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

### மக்கள் நலனே முன்னுரிமை


கல்வி, குடிநீர், சாலை, பாதுகாப்பு, சமூக அடிப்படை வசதிகள் –அனைத்து துறைகளிலும் திட்டமிட்டு செயல்பட்டதாக ஆதரவாளர்கள் கூறுகின்றனர்.

இளைஞர்களுக்கு மட்டும் இந்த 5 ஆண்டுகளில் 25 லட்சம் ரூபாய்க்கும் மேல் கிரிக்கெட் கிட் கொடுத்ததாக இளைஞர்கள் கூறுகின்றனர்.

“வாக்குறுதி மட்டுமல்ல, செயல்பாடும் இருக்க வேண்டும்” என்ற கோஷத்துடன் மரகதம் குமரவேல் தொகுதியில் தொடர்ந்து செயல்பட்டு வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வரவிருக்கும் தேர்தலை முன்னிட்டு, ‘வளர்ச்சி தொடர வேண்டும், மரகதம் குமரவேல் மீண்டும் வர வேண்டும்’ என்ற எதிர்பார்ப்பு தொகுதியில் உருவாகி வருகிறது. மதுராந்தகம்: இம்முறை அரசியல் மட்டுமல்ல, சாதனை கணக்குகளும் பேசப்படும் தொகுதியாக மாறியுள்ளது.

# உச்ச நட்சத்திரத்திற்கு உச்சந்தலையில் கொட்டு



ரூ. 15 கோடி வருமானத்தை மறைத்ததாகக் கூறி, ரூ.1.50 கோடி அபராதம் விதித்த வருமான வரித் துறை உத்தரவை எதிர்த்து, நடிகர் விஜய் தொடர்ந்த வழக்கை தள்ளுபடி செய்து சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

கடந்த 201516ஆம் நிதியாண்டிற்கான வருமான வரி கணக்கை நடிகர் விஜய் தாக்கல் செய்த போது, அந்த ஆண்டிற்கான வருமானமாக ரூ.35,42,91,890 பெற்றதாக குறிப்பிட்டிருந்தார்.



அந்த ஆண்டுக்கான மதிப்பீட்டு நடவடிக்கையை மேற்கொண்ட வருமான வரித் துறை, நடிகர் விஜய் வீட்டில் கடந்த 2015ஆம் ஆண்டு நடத்திய சோதனையில் கைப்பற்றப்பட்ட ஆவணங்களுடன் ஒப்பிட்டு, புலி படத்திற்கு பெற்ற ரூ.15 கோடி வருமானத்தை கணக்கில் காட்டவில்லை என கண்டறிந்தது.

வருமானத்தை மறைத்ததற்கான ஒரு கோடியே 50 லட்சம் ரூபாய் அபராதம் விதித்து கடந்த 2022ஆம் ஆண்டு ஜூன் 30ஆம் தேதி வருமான வரித் துறை உத்தரவு பிறப்பித்தது. அபராதம் விதித்த உத்தரவை ரத்துசெய்யக் கோரி நடிகர் விஜய் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கை 2022ல் விசாரித்த உயர் நீதிமன்றம், வருமான வரித்துறை உத்தரவுக்கு இடைக்கால தடை விதித்திருந்தது.

இந்த வழக்கின் இறுதி விசாரணை நீதிபதி செந்தில்குமார் ராமமூர்த்தி முன்பு இந்த ஆண்டு நடைபெற்றது. அப்போது, விஜய் தரப்பில், சட்டப்படி அபராத உத்தரவை 2019 ஜூன் 30ஆம் தேதிக்கு முன்பே பிறப்பித்திருக்க வேண்டும், ஆனால் காலதாமதமாக 2022ஆம் ஆண்டு தான் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும், அதனால் அபராதம் பிறப்பித்த உத்தரவை ரத்து செய்ய வேண்டுமெனவும் வாதிடப்பட்டது.

வருமான வரித்துறை தரப்பில் நிதியாண்டுக்கான வருமான மதிப்பீட்டை எதிர்த்த மேல்முறையீட்டு நடைமுறை முடிந்த 6 மாதங்களுக்குள்ளேயே அபராத உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது, வருமான வரிச் சட்டப்படி நடிகர் விஜய்க்கு அபராதம் விதித்து பிறப்பித்த உத்தரவு சரிதான், எனவே இந்த வழக்கை தள்ளுபடி செய்து, அபராதத்தை செலுத்த உத்தரவிட வேண்டும் என வாதிடப்பட்டது.

இந்த வழக்கில் நீதிபதி செந்தில்குமார் ராமமூர்த்தி பிப்ரவரி 6ஆம் தேதி தீர்ப்பளித்தார். அவரது தீர்ப்பில், நடிகர் விஜய்க்கு அபராதம் விதித்து உரிய கால அவகாசத்துக்குள் தான் வருமான வரித் துறையால் ரூ. 1.50 கோடி அபராத உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், அந்த உத்தரவில் எந்த சட்டவிரோதமும் இல்லை என்றும் தெளிவுபடுத்தி உள்ளார். எனவே அந்த உத்தரவில் நீதிமன்றம் தலையிட எந்த காரணமும் இல்லை எனக் கூறி, விஜய் தொடர்ந்த வழக்கை தள்ளுபடி செய்து நீதிபதி தீர்ப்பளித்தார்.

தீர்ப்பை வாசித்த உடனேயே, அபராதத்தை எதிர்த்து வருமான வரித் துறையிலேயே மேல்முறையீடு செய்ய அனுமதி வழங்க வேண்டும் என நடிகர் விஜய் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

அந்த கோரிக்கையை ஏற்றுக் கொண்டு, அபராத உத்தரவை எதிர்த்து வருமான வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தில் மேல்முறையீடு செய்ய அனுமதியளித்த நீதிபதி, அபராதம் விதித்த உத்தரவு தாமதமாக பிறப்பிக்கப்பட்டது என்ற காரணத்தின் அடிப்படையில் மேல்முறையீடு செய்யாமல், மற்ற காரணங்களை கூறி மேல்முறையீடு செய்யலாம் என உத்தரவிட்டார்.

# இருள் விலகாத பழங்குடிகளின் வாழ்வு

## ஆனைமல்லூர் காட்டுநாயக்கன் மக்களின் கண்ணீர்க் கதை



காடுகள் இவர்களுக்குத் தாயாக இருந்தது ஒரு காலம். பெயரிலேயே 'நாயக்கன்' (தலைவன்) என்று சூட்டிக்கொண்ட காட்டுநாயக்கன் சமூகத்தினர், இன்று ஒரு சாதிச் சான்றிதழுக்காகவும், ஒரு குடம் தண்ணீருக்காகவும் அதிகார வர்க்கத்தின் வாசல்களில் தவம் கிடக்கிறார்கள்.

ராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காடு வட்டம், ஆனைமல்லூர் ஊராட்சியில் வசிக்கும் 13 காட்டுநாயக்கன் குடும்பங்களின் அவலநிலை, நாகரீகமடைந்த சமூகத்துக்கு பல கேள்விகளை முன்வைக்கிறது.

பல ஆண்டுகளுக்கு முன்பு ஆற்காடு காவனூர் பகுதியில் வீடின்றி, மரத்தடியிலேயே வாழ்ந்து வந்தவர்கள் இம்மக்கள். அப்போதைய ஊராட்சித் தலைவரின் முயற்சியால் ஆனைமல்லூரில் இவர்களுக்கு இடம் ஒதுக்கப்பட்டது. ஊருக்குள் வர அச்சப்பட்ட இவர்களுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அரணாக நின்று தைரியமளித்தது. ஆனால், ஒதுக்கப்பட்ட இடத்திற்கு வந்தும் இவர்களது துயரம் தீரவில்லை; மாறாக உருமாறியிருக்கிறது.

தற்போது உள்ள ஊராட்சி நிர்வாகம், இம்மக்களை அங்கிருந்து வெளியேற்றும் நோக்கில் செயல்படுவதாகக் குற்றச்சாட்டுகள் எழுகின்றன. இம்மக்கள் வசிக்கும் பகுதியில் ஊராட்சி அளவிலான குழுக் கூட்டக் கட்டிடம் கட்டப்பட்டு நெருக்கடி கொடுக்கப்படுவதாக குற்றம்சாட்டப்படுகிறது. 2020–21 நிதியாண்டில் ரூ.5 லட்சத்திற்கும் அதிகமான செலவில் கட்டப்பட்ட சமுதாய சுகாதார வளாகம், இன்று வரை பயன்பாட்டுக்கு கொண்டு வராமல் பூட்டப்பட்டு கிடக்கிறது.

குடிநீர் குழாய் இணைப்பு கேட்டு மாதக்கணக்கில் போராட்டம் நடத்தியும் பலனில்லை. கழிவுநீர் கால்வாய் வசதி இன்றி, மழைக்காலங்களில் விஷப்பூச்சிகளின் கூடாரமாக இப்பகுதி மாறுகிறது.

### கல்விக்கு தடையாகும் 'தொழில்' முத்திரை

இம்மக்களின் மிகப்பெரிய ஏக்கம், தங்கள் பிள்ளைகளாவது படித்து நல்ல நிலைக்கு வர வேண்டும் என்பதுதான். ஆனால், அங்குதான் சாதிச் சான்றிதழ் என்ற மிகப்பெரிய முட்டுக்கட்டை நிற்கிறது.

"நாங்கள் கேஸ் ஸ்டவ் பழுதுபார்க்கிறோம், வளையல் விற்கிறோம் என்பதற்காகவே எங்கள் ஜாதியை வருவாய்த் துறையினர் தீர்மானிக்கிறார்கள். இது முறையா?" இது அந்தப் பெற்றோர்களின் குமுறல்.

பெற்றோர்கள் செய்யும் தொழிலைக் காரணம் காட்டி, உண்மையான பழங்குடி (ST) சான்றிதழ் வழங்க அதிகாரிகள் மறுக்கின்றனர். பள்ளித் தலைமையாசிரியர்கள் சான்றிதழ் கேட்டு அழுத்தம் கொடுப்பதால், பிஞ்சுப் பிள்ளைகள் பள்ளியை பாதியிலேயே நிறுத்தும் சூழல் ஏற்பட்டுள்ளது. இது ஒரு தலைமுறையையே மீண்டும் அறியாமை இருளுக்குள் தள்ளும் செயலாகும்.

மக்களுக்கான ஆட்சியில், சாதிப் பாகுபாடு காட்டப்படுவதும், வருவாய்த் துறையினர் மெத்தனத்தால் ஒரு சமூகத்தின் கல்வி உரிமை பறிக்கப்பட்டது வேதனைக்குரியது. அடிமட்ட அளவில் நடக்கும் இந்த அநீதிகளைக் களைந்து, ஆனைமல்லூர் காட்டுநாயக்கன் மக்களுக்கு உரிய அங்கீகாரமும், அடிப்படை வசதிகளும் வழங்கப்பட வேண்டும் என்பதே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கோரிக்கையாக உள்ளது.

**ராஜிவ்**, ராணிப்பேட்டை

# கொடைக்கானலில்

# நடிகையின் தந்தை கொலை

## பெண் உட்பட 10 பேர் சிக்கினர்



திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் முக்கிய குடியிருப்பு பகுதிகளில் ஒன்றாக குறிஞ்சி ஆண்டவர் முருகன் கோவில் பகுதி உள்ளது. இதன் அருகே மாயாவி திரைப்பட துணை நடிகை விஷ்ணுபிரியாவின் தந்தை சூரிய நாராயணனுக்கு(73) சொந்த பங்களா உள்ளது. இந்த பங்களாவில் அரசின் முறையான அனுமதி இல்லாமல், சுற்றுலாப் பயணிகள் தங்க வாடகைக்கு விடப்படுவதாக சொல்லப்படுகிறது,

இந்நிலையில் இந்த பங்களாவில் சில தினங்களுக்கு முன்பு சுற்றுலாப் பயணிகள் போல் 5 இளைஞர்கள் வந்து தங்கியுள்ளனர். இந்நிலையில், கடந்த சனிக்கிழமை நள்ளிரவு சுமார் 1.30 மணிக்கு, இந்த பங்களாவின் பணியாளர் ஆறுமுகம் வெளியே வந்து சப்தமிட்டு, அருகே உள்ள குடிருப்பு பகுதிவாசி செல்போன் எண்ணில் இருந்து மாவட்ட எஸ்.பி. அலுவலகத்திற்கு அழைத்து, இந்த பங்களாவில் கொலை நடந்து இருப்பதாக தகவல் தெரிவித்துள்ளார்.

சம்பவ இடத்திற்கு வந்த காவல் துறையினர், பங்களாவின் கேட்டில் போடப்பட்டிருந்த பூட்டை உடைத்து கொண்டு உள்ளே சென்றனர். அங்கு முதல் அறையில் கை, கால்கள் டேப் மூலம் கட்டி போடப்பட்ட நிலையில் இருந்த முரளி என்பவரை (பணியாளர்) மீட்டனர். அடுத்த அறையில், துணை நடிகையின் தந்தையை சேரில் அமரவைத்து வாய், மூக்கு, தலை என உடல் முழுவதும் டேப் போட்டு சுற்றி, உடலில் ரத்த காயங்கள் ஏற்படாமல் கொடூரமாக கொலை செய்திருந்தது தெரியவந்தது.

அவரது சடலத்தை மீட்டு கொடைக்கானல் அரசு மருத்துவமனைக்கு உடற் கூறு ஆய்விற்கு அனுப்பிவைத்தனர். பணியாளர் ஆறுமுகத்தை துணியால் கை, கால்களை கட்டிப்பட்டு இருந்த நிலையில், அவரே அவற்றை அவிழ்த்துவிட்டுதப்பி வந்தது தெரியவந்தது. மேலும் பங்களாவில் தங்கி யிருந்த 5 இளைஞர்கள் தங்களை கட்டி போட்டதுடன், சூரிய நாரயணனை டேப்பால் சுற்றி கொலை செய்ததாக பணியாளர்கள் தகவல் தெரிவித்தனர்.

இதையடுத்து, சம்பவ இடத்தை, தேனி மாவட்ட எஸ்.பி. சினேக பிரியா, திண்டுக்கல் மாவட்ட உதவி காவல் கண்காணிப்பாளர் ஆகியோர் பார்வையிட்டனர். கைரேகை நிபுணர்களும், மோப்ப நாயும் வரவழைக்கப்பட்டு தடயங்கள் சேகரிக்கப்பட்டன. இதையடுத்து தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மற்றும் திண்டுக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பிரதீப் அறிவுறுத்தலின் படி 3 தனிப்படைகள் அமைக்கப்பட்டது. கொடைக்கானல் காவல் ஆய்வாளர் வசந்தகுமார் தலைமையில், 100 க்கும் மேற்பட்ட இடங்களில் உள்ள சிசிடிவி கேமராக்களை ஆய்வு செய்து, வேளாங்கண்ணி, சென்னை, புதுச்சேரி உள்ளிட்ட இடங்களுக்கு சென்று தனிப்படையினர் தீவிர விசாரணை நடத்தினர்.

இதில் சோளிங்கர் பகுதியைச் சேர்ந்த ஷியாம்(31) தலைமையில், அவரது நண்பர்களான மகேந்திரன், அரக்கோணத்தை சேர்ந்த கோகுல்நாத்(26) மற்றும் ரஞ்சித்(32), திருவள்ளூரைச் சேர்ந்த கிஷோர் என்ற கிருஷ்ண பிரசாத்(25), அட்சய நடராஜ்(26), கார்த்தி(26) ஆகிய 7 இளைஞர்களுக்கு கொலையில் தொடர்பு இருந்தது தெரியவந்து. இவர்கள் சுய தொழில், கட்ட பஞ்சாயத்து மற்றும் பணத்தை இரட்டிப்பாக்கித் தருவது உள்ளிட்ட பணிகளை செய்து வந்துள்ளனர்.

இந்நிலையில்தான் ஷியாமுக்கு, சென்னையைச் சேர்ந்த மருத்துவர் கிரணுக்கும்(36)



அவரது தாயாரான கிரிஜா(53) என்பவருக்கும் அறிமுகம் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக கிரிஜா பணத்தை இரட்டிப்பாக்கி தருவேன் என மோசடி தொழிலில் ஈடுபட்டு வந்துள்ளார், இந்நிலையில் ஷியாமும் பணத்தை இரட்டிப்பாக்கித் தருவதாக கூறி ரூ.5 லட்சத்தை கிரிஜாவிடம் பெற்றுள்ளார். ஆனால், சொன்னபடி பணம் வராததால், ஷியாமுக்கு கிரண் நெருக்கடி கொடுத்துள்ளார்.

இந்நிலையில்தான், ஷியாமிடம் பேசிய கிரிஜா, ‘எனது அப்பா சூரிய நாரயணன் கொடைக்கானலில் உள்ளார். கடந்த சில மாதங்களுக்கு முன்பு விருகபாக்கத்தில் உள்ள சுமார் மூன்றரை கோடி மதிப்புள்ள அப்பார்ட்மென்ட் வீடு வழக்கில் அவருக்கு சாதகமாக நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. அவரது வீட்டில் அந்த பட்டா உள்ளது. அவரை கட்டிப்போட்டுவிட்டு, அந்த பட்டாவை எடுத்து வந்தால் பணம் தருகிறேன்’ என்று கூறியுள்ளார். இதற்கு கிரணும் உதவியுள்ளார்.

கடந்த 3 மாதங்களுக்கு முன்பே இதற்கான திட்டத்தை தீட்டியுள்ளனர். இதையடுத்து இந்த 7 பேர் கொண்ட கும்பல் 2 முறை கொடைக்கானலுக்கு சென்று, சூரிய நாரயணின் பங்களாவிலும், அதன் அருகே உள்ள பங்களாவிலும் தங்கியுள்ளனர். மேலும் பங்களாவில் உள்ள சூழல்கள், நிலவரங்கள், ஆவணங்கள் வைக்கும் இடம் ஆகியவற்றை நோட்டமிட்டுள்ளனர். இதைத் தொடர்ந்து, 3வது முறையாக ஷியாம், மகேந்திரன், கோகுல்நாத், ரஞ்சித், கிஷோர் உள்ளிட்ட 5 குழுவினர் காரில் இந்த பங்களாவுக்கு கடந்த 19ம் சென்று தங்கினர். அந்த பங்களாவில் பலமுறை வந்து தங்கியதுபோல நடித்து பழகியுள்ளனர். பங்களா பணியாளர் ஆறுமுகத்திற்கு மது பாட்டில்கள் அதிகமாக வாங்கி வந்துள்ளனர். பங்களாவிற்கு வந்த உடனே ஆறுமுகம் உள்ளிட்ட அனைவரும் இணைந்து மது அருந்தியுள்ளனர்.

20ஆம் தேதி முழுவதும் பங்களாவிலேயே இருந்துள்ளனர், 21ஆம் தேதி மாலை ஆறுமுகம் மது பாட்டில் வாங்க சென்றுள்ளார். அதேபோல அங்குள்ள பெண் பணியாளர் அவரது வீட்டிற்கு பணி முடிந்து சென்றுள்ளார். இதுதான் தருணம் என நினைத்த 5 பேரும், பங்களா பணியாளர் முரளியை ஓர் அறையில் கட்டி போட்டுள்ளனர். அடுத்த அறையில் சூரிய நாரயணனை சேரில் அமர வைத்து டேப் மூலம் வாய், மூக்கு, தலை உட்பட உடல் முழுவதும் கட்டி வைத்துள்ளனர்,

மது வாங்கி வந்த ஆறுமுகத்தை டேப் தீர்ந்ததால் துணி மூலம் கை கால்களை கட்டி போட்டதாகவும், பங்களாவில் உள்ள ஹார்ட் டிஸ்க், மற்றும் மூன்றரை கோடி ரூபாய் மதிப்புள்ள அப்பார்ட்மென்ட் பட்டா உள்ளிட்டவற்றை கைப்பற்றி பங்களாவின் வெளிபுறத்தில் பூட்டு போட்டுவிட்டு தப்பி ஓடி சென்றதாக அவர்கள் போலீஸில் வாக்குமூலம் அளித்துள்ளனர். மேலும் அரக்கோணத்தில் ஸ்டுடியோ வைத்துள்ள விக்னேஷ்(28) கடையில் இந்த ஹார்ட் டிஸ்க், பட்டா மற்றும் செல்போனை வைத்துவிட்டு சென்றதாக தெரிவித்தனர்.

இதையடுத்து, ஷியாம், ரஞ்சித், கோகுல்நாத், கிஷோர், அட்சய நடராஜன், கார்த்தி, விக்னேஷ் மற்றும் கொலைக்கு மூலக்காரணமான கிரிஜா, அவரது மகன் கிரண் ஆகியோரை போலீஸார் கைது செய்தனர். பணியாளர் ஆறுமுகத்துக்கும் கிரிஜாவுக்கும் ஏற்கெனவே தொடர்பு இருப்பதும், இந்த கொலைக்கு ஆறுமுகம் உறுதுணையாக இருந்ததும் தெரியவந்ததால் அவரையும் போலீஸார் கைது செய்தனர். மகேந்திரன் என்பவர் மட்டும் தப்பியோடிவிட்டார். 10 பேரிடம் இருந்து தங்க மோதிரம், செயின், மூன்றரை கோடி ரூபாய் மதிப்புள்ள அப்பார்ட்மெண்ட்டின் பட்டா, 2 கார்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

சூரிய நாரயணனும், கிரிஜாவின் கணவரும் நண்பர்கள் என்பதும், சென்னையில் சிகிச்சைபெற வந்தபோது சூரிய நாராயணன் கிரிஜா வீட்டில் 3 மாதங்கள் தங்கியிருந்து மருத்துவமனைக்கு சென்று வந்ததும் விசாரணையில் தெரியவந்தது.

**கணேஷ்**, கொடைக்கானல்

# விஜய் கட்சி வெற்றி பெறுமா?



**சேரல் இளஞ்செழியன்**, மூத்த பத்திரிகையாளர்

தற்போது நடைபெற்று வரும் திமுக அரசின் பதவிக்காலம் வருகிற மே 20 ஆம் தேதி முடிவடைகிறது. புதிய அரசுக்கான தேர்தல் ஏற்பாடுகள் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

தமிழக சட்டமன்றத் தேர்தல் களத்தில், புதிய வரவான விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகமும் இந்தத் தேர்தலில் போட்டியிடுகிறது.

கடந்த 50 ஆண்டுகளாக திமுக, அதிமுக ஆகிய இருபெரும் கட்சிகள் தலைமையில் நடைபெற்று வந்த போட்டியில் இப்போது விஜய் கட்சியும் இணைந்துள்ளது. விஜய் தலைமையிலான தவெகவின் உண்மையான பலம் இதுவரை தெரியவில்லை. ஆனாலும், தவெக நடத்தும் பொதுக்கூட்டங்களுக்கு இளைஞர்கள் பெருமளவில் தன்னெழுச்சியாக வருவதைப் பார்க்க முடிகிறது. தேர்தலில் வெற்றி பெறும் அளவுக்கு அவர் கட்சிக்கு வாக்குகள் விழுமா? என்று தெரியவில்லை.

50 ஆண்டுகளாகத் திமுக, அதிமுக அரசுகள் மாறி மாறி ஆட்சி செய்து, தமிழக மக்கள் மத்தியில் புதிய மாற்றத்தை எதிர்பார்க்கும் சூழலை ஏற்படுத்தி விட்டார்கள் என்பது உண்மை.

இதற்கு முக்கியக் காரணம், அடுத்த தலைமுறைக்கான திட்டம் என்ற நிலையில் இருந்து விலகி எப்படியாவது வருகிற தேர்தலில் வெற்றி பெற்றுவிட வேண்டும் என்ற நோக்குடன் அண்மைக் காலத்தில் அனைத்து அறிவிப்புகளையும் 2 கட்சியினரும் வெளியிட்டு வருகிறார்கள்.

2016ஆம் ஆண்டு திமுக வெளியிட்ட தேர்தல் அறிக்கையில், நாங்கள் ஆட்சிக்கு வந்ததும் முதல் கையெழுத்து, தமிழகத்தில் குடும்பங்களை அழித்துக் கொண்டே இருக்கும் டாஸ்மாக் மதுக்கடைகளை மூடுவதுதான் என்றார்கள். அப்போது, அதிமுகவும் பூரண மது விலக்கை படிப்படியாக 5 ஆண்டுகளில் நடைமுறைப்படுத்துவோம் என்று சொன்னது. அந்தத் தேர்தலில் அதிமுக வெற்றி பெற்றது. ஆனால், அக்கட்சி கொடுத்த வாக்குறுதியைக் காற்றில் பறக்க விட்டது.

பின்னர், 2021இல் வெற்றி பெற்ற திமுக அரசு அந்த வாக்குறுதியையே மறந்துபோனது. அண்மையில், எவ்வித முன்னறிவிப்பும் இன்றி ரூபாய் 5000 பணத்தை தாய்மார்களின் வங்கிக் கணக்கில் திமுக அரசு செலுத்தியது. நாங்கள் ஆட்சிக்கு வந்தால் 10,000 ரூபாய் தருவோம் என்று அதிமுக பதிலுக்கு அறிவித்துள்ளது.

இப்படி, அடுத்த தலைமுறைக்கு என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்யாமல் தேர்தல் வெற்றிக்கு என்னவெல்லாம் செய்ய முடியுமோ அதையெல்லாம் திமுகவும் அதிமுகவும் செய்து கொண்டிருக்கின்றன.

அதிகாரம், அந்தஸ்துடன் எப்போதும் உலா வர வேண்டும். இந்தக் கொள்கையை அண்மைக்கால அரசியல் தலைவர்கள் பெரும்பாலானோர் கடைபிடிப்பதற்கு ஒரு சிறந்த உதாரணம் ஓ.பன்னீர்செல்வம் திமுகவில் இணைந்ததுதான். எம்ஜிஆரும் ஜெயலலிதாவும் அடிப்படையிலேயே திமுக எதிர்ப்பு அரசியலை செய்தவர்கள். அந்தப் பாசறையில் அரசியல்

பயின்ற ஓபிஎஸ் திமுகவில் இணைந்து மக்கள் மத்தியில் ஏகமான வெறுப்புக்கு ஆளாகியுள்ளார். அவர் இணைந்தது திமுகவுக்கு உண்மையிலே பலவீனம் தான்.!

திமுக, அதிமுகவுக்கு மாற்றாக பாஜகவை தமிழக மக்கள் ஒருபோதும் ஏற்கவில்லை. வேறு யாராவது வர மாட்டார்களா என்று, மாற்றத்தை விரும்பும் இளைஞர்களும் பொதுமக்களும் எதிர்பார்த்துக் கொண்டிருந்த நேரத்தில் தான் விஜய் கட்சியை தொடங்கினார். அவருக்கு ஆதரவும் கிடைத்து வருகிறது. இந்த அருமையான வாய்ப்பை இந்தத் தேர்தலில் விஜய் நன்கு பயன்படுத்திக் கொள்வாரா? என்று ஆராய்ந்து பார்த்தால் அப்படித் தெரியவில்லை.

காங்கிரஸ் கட்சியோடு கூட்டணி அமையாதது விஜய் கட்சிக்கு பேரிழப்பு ஆகும். ஆனாலும், கணிசமான ஓட்டுகளை அவர் கட்சி பெறும் என்று தெரிகிறது. தேர்தலுக்குப் பிறகும் அவர் உறுதியாக அரசியல் களத்தில் நின்றால் அடுத்த தேர்தலில் வெற்றிக் கணக்கைத் தொடங்க வாய்ப்புள்ளது.

சீமான் வழக்கம் போல நான்காவது இடத்திற்கு வருவார் என்று தெரிகிறது. கொள்கை சார்ந்து செயல்படும் பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் அவர் பின்னால் உள்ளதால் நாம் தமிழர் கட்சி வழக்கம் போல இந்த தேர்தலுக்கும் பிறகும் வீரியத்துடன் செயல்படும் என்று தெரிகிறது.

தமிழ்நாட்டின் இன்றையக் கடன் சுமார் ரூபாய் 10 லட்சம் கோடி ஆகும். தமிழக அரசின் மதுவிலக்குத் துறை எனப்படும் மது பெருக்குத் துறையை தவிர பெரும்பாலான அரசுத்துறைகள் நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

பணி ஓய்வு பெறும் ஊழியர்களுக்கு உடனடியாக கொடுக்க வேண்டிய ரொக்கத்தைக் கொடுக்க கஜானாவில் பணம் இல்லை. கருவூலத்தில் பணம் இல்லாததால் காலி அரசு பணியிடங்களை நிரப்ப முடியவில்லை.

இப்போது, ஆளும் திமுகவின் ஒரே நோக்கம் தேர்தல் வெற்றிதான். இருக்கிற பணத்தையும் இலவசத் திட்டங்களுக்கு காலி செய்துவிட்டு, தேர்தலில் வெற்றி பெற்ற பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று திமுக தலைமை கருதுகிறது. அதிமுகவும் வென்றால் போதும் என்கிற முனைப்பில், கருவூலத்தைப் பற்றிய கவலையின்றி இலவச திட்டங்களை வாக்குறுதிகளாக அறிவித்து வருகிறது. எனவே தேர்தலுக்குப் பிறகு பெரும் பாரத்தைச் சுமக்க தமிழக மக்கள் தயாராக இருக்க வேண்டும்.!





# கட்சி, கூட்டணி, தேர்தல்
# மக்கள் விருப்பம் என்ன?

2026 சட்டப்பேரவைத் தேர்தல் தேதி விரைவில் அறிவிக்கப்பட உள்ளது. அரசியல் கட்சிகளும் தங்களுக்கு கூட்டணிகளை அமைந்துள்ளதோடு, தங்கள் பலத்தை நிரூபிக்க மாநாடுகள் பொதுக்கூட்டங்களை நடத்தத் தொடங்கிவிட்டன.

அதிமுக மற்றும் திமுக அமைந்துள்ள கூட்டணிகளில் தோழமைக் கட்சிகளுக்கு எவ்வளவு சீட்டுகள் ஒதுக்கப்படும், எந்தெந்த தொகுதிகள் ஒதுக்கப்படும் என்பதுதான் அடுத்த ஒரு மாதத்துக்கு பேசுபொருளாக இருக்கப் போகிறது. திமுக கூட்டணியில் தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தை தொடங்கப்பட்டுவிட்டது. முதல்கட்டமாக ஐயூஎம்எல், மமக ஆகிய கட்சிகளுக்கு திமுக தொகுதிகளை ஒதுக்கியிருக்கிறது.

திமுக கூட்டணியில் தேமுதிக புதிதாக வந்து சேர்ந்துள்ளதால், தொகுதிப் பங்கீட்டில் உரசல்கள் நிகழக் கூடும். ஆனாலும், பாஜக எதிர்ப்பு என்ற ஒற்றைப் புள்ளியில், அனைத்துக் கட்சிகளும் விட்டுக்கொடுத்து செல்லும் மனநிலையில்தான் உள்ளன என்பது தெரிகிறது. உதயசூரியன் சின்னத்தில் நிற்க சிறிய கட்சிகள் விரும்பம் தெரிவித்தாலும் அனைவருக்கும் சீட் தரும் நிலையில் திமுக இல்லை. அங்கு கட்சிகளின் எண்ணிக்கை நிரம்பி வழிகிறது.

இந்த தேர்தலில் திமுக கூட்டணியில் முதல்வர் ஸ்டாலினின் மருமகனான சபரீசன் மிகப்பெரிய பங்கு வகிப்பார் என்பது தெரிகிறது. தேமுதிகவை கூட்டணிக்குள் கொண்டு வந்ததில் அவருக்கு பெரும் பங்கு உண்டு. தேமுதிகவுக்கு ஒரு மாநிலங்களவை உறுப்பினர் பதவி உறுதி செய்யப்பட்டது. எப்போதும் போல சீமான் 234 தொகுதிகளில் வேட்பாளர்களை நிறுத்தி அறிமுகப்படுத்தி இருக்கிறார்.

இந்த நிலையில்தான் அரசியல் கட்சித் தொடங்கி இந்த தேர்தலில் முதன்முறையாக களம் காணுகிறார் நடிகர் விஜய். அவரது தவெக கட்சி பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று அவரது ரசிகர்கள் தீர்க்கமாக நம்புகிறார்கள். அவரது தவெக கட்சி எத்தனை சீட்களை வெல்லும் என்பது பற்றி எந்த சர்வேயும் உறுதியாக தெரிவிக்கவில்லை. அவருக்கு சென்னை உள்ளிட்ட நகரப்பகுதிகளில் பெரும் ஆதரவு இருப்பதை மட்டும் உணர முடிகிறது.

எனினும், அவரால், எத்தனை சீட்களை வெல்ல முடியும் என்பதை யூகிக்க முடியவில்லை. வெல்லக் கூடிய ஒரு வேட்பாளர் தோற்கவும், தோற்கக் கூடிய ஒரு வேட்பாளர் வெல்லும் வகையிலும், விஜயின் தவெக தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும். எனவே, இந்த தேர்தல் கருத்துக்கணிப்பு ஜாம்பவான்களாலும் யூகிக்க முடியாத தேர்தலாக அமைந்திருக்கிறது.

ஆனால், மக்களிடையே மாற்றத்தை எதிர்பார்க்கும் மனநிலை போய், என்ன கிடைக்கும் என்பதை எதிர்பார்ப் மனநிலை மேலோங்கி யிருப்பது ஜனநாயகத்துக்கு உகந்தது அல்ல.

# புதிய கட்சி தொடங்கிய சசிகலா




சொத்து குவிப்பு வழக்கில் பெங்களூர் சிறையில் தண்டனை காலத்தை அனுபவித்து விட்டு வெளியே வந்த சசிகலா அதிமுகவை ஒன்றிணைத்து தான் பொது செயலாளராகலாம் என நினைத்திருந்தார். ஆனால், எடப்பாடி பழனிசாமி அதற்கு நேர்மாறாக கட்சியை பிடி தளராமல் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளார்.

அதை உடைக்க பல்வேறு வழிகளில் போராடி வந்த சசிகலா, தற்போது தனது அரசியலின் கடைசி முயற்சியாக தனிக்கட்சி தொடங்கியுள்ளார். பல ஆண்டுகள் ஜெயலலிதாவுடன் இணைந்து பயணித்த அனுபவத்தை மூலதனமாக கொண்டு அவர் கட்சி ஆரம்பித்திருந்தாலும், தென் மாவட்டத்தில் வசிக்கும் தனது சமூகத்தை குறிவைத்தே கட்சித் தொடங்கியுள்ளார் சசிகலா.

அவர் தனித்துப் போட்டியிடப் போகிறாரா, ஏதேனும் கூட்டணியில் இணையப் போகிறாரா, இல்லை யாருக்காவது ஆதரவு தெரிவிப்பாரா என்பதெல்லாம் இனிதான் தெரியவரும். கட்சிக் கொடியை மட்டும் கமுதி பொதுக்கூட்டத்தில் அறிமுகம் செய்த சசிகலா கட்சிப் பெயரை அறிவிக்கவில்லை.



அவர் தனித்து நின்றால், சில தென் மாவட்டங்களில் வாக்குகளைப் பிரித்து திமுகவின் வெற்றிக்கு உதவுவார். அந்த அளவுக்கே அவரது தாக்கம் இருக்கக் கூடும். ஒருவேளை அதை எதிர்பார்த்தே கூட அவர் கட்சி ஆரம்பித்திருக்கலாம்.

ஒருவேளை பேரவைத் தேர்தலில், அதிமுக தோற்றால், இந்த முறை கட்சி முக்கியஸ்தர்களும், முன்னணித் தலைவர்களும், தொண்டர்களும் தனது தேவையை உணர்வார்கள் என சசிகலா நம்புகிறார். அதற்காகத்தான் கட்சியும் தொடங்கியுள்ளார்.

அவரது அரசியல் பிரவேசம் அவருக்கு லாபம் தருமா என்பதை அறிந்து கொள்ள தேர்தல் முடிவுவரை காத்திருக்கத்தான் வேண்டும். சசிகலா கட்சி தொடங்கி இருக்கும் நிலையில் அது எங்கே தனக்கு எதிராக அமைந்து விடுமோ என பயந்து டிடிவி தினகரன், சசிகலாவிற்கு எதிராக மறைமுகமாக விமர்சனத்தை முன்வைத்திருப்பதுதான் ஆச்சரியம்.

**ஜோதி நரசிம்மன்**

# நம்புதாளையில் ஆற்றை தூர்வாரி பாலம் கட்டித்தர கோரும் மீனவர்கள்

**கவின்**, ராமநாதபுரம்

ராமநாதபுரம் மாவட்டம் தொண்டி அருகே உள்ள நம்புதாளை ஆற்றுப்படுகை, குப்பை கூளங்கள் நிரம்பி பயனற்ற நிலையில் உள்ளது. மேலும் ஆற்றின் இருபுறமும் வசிக்கும் மக்கள் பாலம் கட்டித் தர கோரிக்கை விடுத்துள்ளனர்.

தொண்டி அருகே உள்ள நம்புதாளையில் 500க்கும் மேற்பட்ட மீன்பிடி படகுகள் உள்ளன. இந்த படகுகளை நிறுத்த போதிய இட வசதி கடற்கரை பகுதியில் இல்லை. அதனால் பெரும்பாலான படகுகளை கடலின் உள்பகுதியில் நிறுத்துகின்றனர். மழை காலங்களில் காற்றின் வேகம் அதிகமாக இருக்கும்போது படகுகள் ஒன்றோடு ஒன்று மோதி சேதமடைந்து விடுகின்றன.

மழைக் காலங்களில் படகுகளை பாதுகாக்க, படகை நிறுத்த கடலுக்குள் செல்லும் மீனவர்கள் இயற்கை சீற்றத்தில் சிக்கி உயிரிழக்கவும் நேரிடுகிறது. அதனால் ஆற்றுப்பகுதியை தூர்வாரி ஆழப்படுத்தினால் அதிகளவில் படகுகளை நிறுத்தி வைக்கலாம். கடலின் தெற்கு ஓடையின் வலது புறம் வசிக்கும் மீனவர்கள் இந்த ஆற்றை கடக்க முடியாமல் சுமார் 1 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டியுள்ளது. அதனால் இந்த ஆற்றின் குறுக்கே பாலம் கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். தற்போது இந்த ஆறு முற்றிலும் பிளாஸ்டிக் கழிவுகளால் நிரம்பி, எவ்வித பயன்பாடும் இல்லாமல் உள்ளது.

மீனவர்களின் நலன் காக்க இந்த ஆற்றை தூர்வாரி ஆழப்படுத்தி கரையின் இருபுறமும் அரிப்பு ஏற்படாத வகையில் தடுப்பு சுவர் கட்ட வேண்டும். மேலும் ஆற்றின் குறுக்கே பாலம் கட்டவும், பிளாஸ்டிக் குப்பைகளை கொட்டாமல் இருக்க நடவடிக்கையும் எடுக்க பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த ஆற்றை தூர்வார கோரி மதுரை உயர் நீதிமன்ற கிளையில் வழக்கு தொடுத்தனர்.



இதையடுத்து ஆற்றை தூர்வாரி நவீன மீன்பிடி துறைமுகம் அமைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. ஆனால் ஒரு வருடம் கடந்தும் எவ்வித பணியும் நடைபெறவில்லை.

இதுகுறித்து தமிழ்நாடு மீனவர் உரிமை பாதுகாப்பு இயக்க மாநில துணை ஒருங்கிணைப்பாளர் விஜய் கூறியது, நம்புதாளையின் பிரதான தொழிலாக மீன்பிடி தொழிலும் அதிகமான மீனவர்களும் வசிக்கின்றனர். ஆனால் மீனவர்களின் வாழ்வாதாரம் மேம்பட எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆற்றுப்பகுதியை தூர்வார வேண்டும், பாலம் கட்ட வேண்டும், கரையின் இருபுறமும் தடுப்பு சுவர் கட்ட வேண்டும், ஆறு மற்றும் கடலில் பிளாஸ்டிக் கழிவுகள் கலப்பதை தடுக்க வேண்டும் என அனைத்து துறை அதிகாரிகளிடமும் மனு கொடுத்துள்ளோம் எவ்வித பயனும் இல்லை. நீதிமன்ற தீர்ப்பை கூட நிறைவேற்ற அதிகாரிகள் முன்வரவில்லை. இது குறித்து மாவட்ட ஆட்சியர் சிம்ரன் ஜித் சிங் காலோனிடம் மனு கொடுத்துள்ளோம் உரிய நடவடிக்கை எடுப்பதாக கூறியுள்ளார். இவ்வாறு அவர் தெரிவித்தார்.



# டேட்டிங் ஆப் மூலம் வலை

## தாசில்தாரிடம் கத்தி முனையில் 25 சரவன் கொள்ளை

## பிரபல ரவுடி கும்பல் பிடிபட்டது









தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த பிரபல A+ பட்டியல் ரவுடி ஹைகோர்ட் மகாராஜா(32). அவரது மனைவி பிரியதர்ஷினி(25) மற்றும் அவருடைய பெண் கூட்டாளி தனலட்சுமி (52) உள்ளிட்ட 6 பேர் கொண்ட கும்பல் ஒரு டேட்டிங் ஆப் மூலம் தாசில்தார் ஒருவரை தொடர்பு கொண்டுள்ளனர்.

மதுரவாயல் பகுதியில் குடும்பத்துடன் வசித்து வரும் எட்வர்ட் வில்சன்(54), கடந்த 2025ம் ஆண்டு திருவள்ளுவர் மாவட்டத்தில் தாசில்தாராக பணியாற்றியப்போது லஞ்சப் புகாரில் கைது செய்யப்பட்டு இடைநீக்கம் செய்யப்பட்டார். இவரிடம்தான் கடந்த 17ம் தேதி டேட்டிங் ஆப் மூலம் ஹைகோர்ட் மகாராஜாவின் மனைவி பிரியதர்ஷினி பேசி பழகியுள்ளார்.

அப்போது தாசில்தார் எட்வர்ட் வில்சன், தான் கல்குவாரி உரிமையாளர் என்றும் தனக்கு 2 கல்குவாரிகள் உள்ளதாகவும் கூறி வாட்ஸ் ஆப்பில் கால் மற்றும் வீடியோ கால் மூலம் பேசி பழகி வந்துள்ளார். ஒருகட்டத்தில் எட்வர்ட் வில்சனிடம், பிரியதர்ஷினி நேரடியாக சந்தித்து பேச வேண்டும் என்று கூறியுள்ளார்.

இதனை அடுத்து வேளச்சேரியில் உள்ள அடையார் ஆனந்த பவன் ஓட்டலில் இருவரும் முதல் முறையாக சந்தித்து உள்ளனர். அப்போது பிரபல ரவுடி ஹைகோர்ட் மகாராஜா அவரது பெண் கூட்டாளி தனலட்சுமி உள்ளிட்டோர் மறைந்து இருந்து நோட்டமிட்டு உள்ளனர்.

பின்னர், ஹோட்டலில் இருந்து வெளியே வந்த தாசில்தார் எட்வர்ட் வில்சன் தனது இன்னோவா காரில் மதுரவாயல் பகுதியில் உள்ள வீட்டிற்கு சென்றார். ரவுடி ஹைகோர்ட் மகாராஜா, அவரது மனைவி பிரியதர்ஷினி மற்றும் பெண் கூட்டாளி தனலட்சுமி உள்ளிட்ட 6 பேர் கொண்ட கும்பல் தாசில்தார் காரை பின்தொடர்ந்து சென்று அவரது வீட்டை நோட்டமிட்டனர்.

அதை தொடர்ந்து, ரவுடி ஹைகோர்ட் மகாராஜா கும்பல் சோழிங்கநல்லூரில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் வீடு ஒன்றை வாடகைக்கு எடுத்து தங்கியுள்ளனர். அங்கு வருமாறு தாசில்தார் எட்வர்ட் வில்சனுக்கு பிரியதர்ஷினி அழைப்புவிடுத்துள்ளார். இதையடுத்து கடந்த 17ம் தேதி தாசில்தார் எட்வர்ட் வில்சன் அவரது இன்னோவா காரில் பிரியதர்ஷினியை சந்திக்க சென்றார். முன்னெச்சரிக்கையாக தான் அணிந்து இருந்த சுமார் 25 சவரன் நகைகளை அவிழ்த்து காரில் வைத்து விட்டு சென்றுள்ளார்.

அப்போது பிரியதர்ஷினி தாசில்தார் எட்வர்ட் வில்சனை வாசல் வரை வந்து அழைத்துச் சென்று வீட்டின் ஒரு அறையில் அமர வைத்துவிட்டு கதவை மூடி சென்றுள்ளார் பிரியதர்ஷினி. சிறிது நேரத்தில் பிரபல ரவுடி ஹைகோர்ட் மகாராஜா, அவரது மனைவி பிரியதர்ஷினி, பெண் கூட்டாளி தனலட்சுமி மற்றும் அருண் உட்பட 6 பேர் கொண்ட கும்பல் கதவை திறந்து உள்ளே சென்று தாசில்தார் ஆடை அனைத்தையும் அவிழ்க்க செய்து உடலில் ஒட்டு துணி இல்லாமால் வீடியோ எடுத்து வைத்துக்கொண்டு தங்க நகை மற்றும் பணம் கேட்டு மிரட்டியுள்ளனர். தன்னிடம் எதுவும் இல்லை என எட்வர்ட் வில்சன் கூறியுள்ளார்.

எனினும், அவர் கத்தி கூச்சலிட்டால் ஆபத்து என்பதால், அவரது வாயில் துணி வைத்து

அடைத்து அவரது காரிலேயே கடத்திக் கொண்டு, ஈசிஆர் சாலை மாமல்லபுரம் அருகே திருவிடந்தை பகுதியில் ஆள்நடமாட்டம் இல்லாத கடற்கரைக்கு அழைத்து சென்றுள்ளனர்.

கத்தி முனையில் மீண்டும் பணம் மற்றும் தங்க நகை கேட்டு மிரட்டிய போது எதுவும் இல்லை என்று கூறியதால் கடற்கரையில் பள்ளம் தோண்டி உடலை முழுவதும் புதைத்து கழுத்து பகுதியை மட்டும் மூடமால் வைத்துக்கொண்டு மிரட்டியுள்ளனர். அப்போதும் தன்னிடம் ஒன்றும் இல்லை என்று தாசில்தார் எட்வர்ட் வில்சன் கூறியதால் அவருக்கு உடலில் மயக்க ஊசி செலுத்தியுள்ளனர்.

தாசில்தார் எட்வர்ட் வில்சனிடம் எதுவும் கிடைக்காததால் அவரது இன்னோவா காரில் அவரை கடத்திக் கொண்டு வண்டலூர் வரை சென்றுள்ளனர். அப்போது, காரில் இருந்த 25 சவரன் தங்க நகை, ரவுடி மகாராஜாவின் கண்ணில்பட்டது. அதை எடுத்துக் கொண்டு வண்டலூர் மேம்பாலம் கீழே தாசில்தார் எட்வர்ட் வில்சனை இறக்கி விட்டுவிட்டு கொள்ளை கும்பல் அங்கிருந்து தப்பி சென்றது.

ஒரு கட்டத்தில் மயக்கம் தெளிந்த தாசில்தார் மதுரவாயலில் உள்ள வீட்டிற்கு சென்று விட்டு பின்னர் சம்பவம் குறித்து செம்மஞ்சேரி காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார். புகாரின் அடிப்படையில் செம்மஞ்சேரி போலீஸார் வழக்குப் பதிவு செய்தனர்.

இதையடுத்து, தாம்பரம் மாநகர காவல் ஆணையர் அமல்ராஜ் உத்தரவின் பேரில், பள்ளிக்கரணை மாவட்ட காவல் துணை ஆணையர் பொன் கார்த்திக் குமார் மேற்பார்வையில், செம்மஞ்சேரி சரக உதவி ஆணையாளர் வெங்கடேசன் தலைமையில் உதவி ஆய்வாளர்கள் சுரேஷ் மற்றும் சந்தோஷ்குமார் உட்பட 9 பேர் அடங்கிய தனிப்படை அமைத்து தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

சுமார் 1,100க்கும் மேற்பட்ட சிசிடிவி கேமரா காட்சிகளை தனிப்படை போலீஸார் ஆய்வு செய்தனர். அப்போது மீண்டும் சோழிங்கநல்லூர் TNHB சாலையில் சென்று கொண்டிருந்த மகாராஜா, பிரியதர்ஷினி மற்றும் தனலட்சுமி ஆகிய மூவரை செம்மஞ்சேரி சரக உதவி ஆணையாளர் வெங்கடேசன், உதவி ஆய்வாளர்கள் சுரேஷ், சந்தோஷ்குமார் ஆகியோர் கொண்ட தனிப்படை போலீஸார் சுற்றி வளைத்து கைது செய்தனர்.

கடந்த ஆண்டு டிச.4 ம் தேதி அண்ணாநகர் பகுதியைச் சேர்ந்த வழக்கறிஞர் சதீஷ் செந்தூரன்(48) என்பவரிடமும் பிரியதர்ஷினி அதே டேட்டிங் ஆப் மூலம் பழகி மேடவாக்கம் பகுதிக்கு வரவழைத்து இதே 25 சவரன் தங்க நகையை கொள்ளையடித்தது விசாரணையில் தெரியவந்தது.

இதன்மூலம் கிடைத்த பணத்தில் கொள்ளை கும்பல் பெங்களூரு சென்று மது, மாது என உல்லாசமாக இருந்து விட்டு அங்கிருந்து புதுச்சேரி சென்று அங்கும் அங்கும் உல்லாசமாக இருந்தும் விசாரணையில் தெரியவந்தது. மேலும் 2017ம் ஆண்டு மகாராஜா, தனது முன்னாள் காதலி முத்துமாரியை கொலை செய்த வழக்கும் நிலுவையில் உள்ளதும் விசாரணையில் தெரியவந்தது.

இதுபோல, சென்னை, தூத்துக்குடி, மதுரை, திருநெல்வேலி, புதுக்கோட்டை, கோயம்புத்தூர் மற்றும் தாம்பரம் மாநகர காவல் ஆணையர் அலுவலகத்திற்கு உட்பட்ட காவல் நிலையங்களில் மகாராஜா மீது பல வழக்குகள் நிலுவையில் உள்ளதும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

கைது நடவடிக்கையின்போது, தப்பி ஓடிய மகாராஜா, தவறி கீழே விழுந்ததில் வலது கை மற்றும் இடது காலில் எலும்பு முறிவு ஏற்பட்டது. அவருக்கு லோலீஸார் மாவு கட்டு போட்டுள்ளனர். தொடர்ந்து 3 பேர் மீதும் வழக்குப் பதிவு செய்த செம்மஞ்சேரி போலீஸார் சோழிங்கநல்லூர் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் மெஜிஸ்திரட் முன்பு ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர். தலைமறைவாக உள்ள அருண், அருண் கூட்டாளிகள் 2 பேர் என 3 பேரை தேடி வருகின்றனர்.

குற்றச்சம்பவம் நடைபெற்ற அடுத்த ஐந்தே நாளில் முக்கிய குற்றவாளியை கைதுசெய்ததோடு, 50 சவரன் நகை, 2.50 லட்சம் ரொக்கம், இருச்சக்கர வாகனம் ஆகியவற்றை பறிமுதல் செய்த பள்ளிக்கரணை மாவட்ட காவல் துணை ஆணையர் பொன் கார்த்திக் குமார், செம்மஞ்சேரி சரக உதவி ஆணையாளர் வெங்கடேசன், உதவி ஆய்வாளர்கள் சுரேஷ், சந்தோஷ்குமார் உள்ளிட்ட 13 பேர் அடங்கிய தனிப்படையினரை தாம்பரம் மாநகர காவல் ஆணையர் அமல்ராஜ் பாராட்டினர்.

# புற்றீசலாய் முளைக்கும் கட்சிகள்

## விதிகளை ஒழுங்கு படுத்துமா தேர்தல் ஆணையம்?

**குரும்பூரான்**, மூத்த செய்தியாளர்

5 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் பொது தேர்தல் என்பது ஆட்சி மாற்றத்திற்கான தேர்தல் என்றாலும் ஜனநாயகத்தில் இந்த காலகட்டத்தை ‘தேர்தல் திருவிழா’ என்று அழைக்கின்றனர். ‘தேர்தல் திருவிழா’ வந்துவிட்டால் அரசியல் கட்சிகளுக்கு கொண்டாட்டம் தான்.

தேர்தல் ஆணையம் எந்த கட்டுப்பாட்டை விதித்தாலும் அதனையும் மீறி பிரியாணி, மது வகைகளை வழங்குவது என பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபடுவதில் அரசியல் கட்சிகளுக்கு நிகர் அவர்கள் மட்டுமே

இதுபோன்ற, அரசியல் நாடகங்கள் நடவடிக்கைகள் இந்திய அளவில் பல மாநிலங்களில் நடக்கிறது என்றாலும் தமிழ்நாட்டில் சொல்ல வேண்டிய அவசியமே இல்லை. தேர்தல் வந்துவிட்டால் கட்சிகள் அனைத்தும் புற்றீசலாய் கிளம்பி விடுகின்றன.

இதுபோன்ற, கொள்கைத் தெளிவற்ற தற்காலிக கட்சிகள் உருவாவதற்கும், பெரிய கட்சிகளே காரணம் என்று புகார் கூறப்படுகிறது. சாதி ரீதியாகவும் மத ரீதியாகவும் கட்சிகள் துவங்கப்பட்டு வாக்குகளை பிரிப்பதற்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டு பல்வேறு கட்சிகள் களம் இறக்கப்படுவதாக தெரிகிறது. தேர்தல் ஆணையத்தின் பதிவு செய்த கட்சிகள் பல இருந்தாலும் இவற்றுக்கு போட்டியாக பதிவு செய்யாத அமைப்புகளும் இயக்கங்களும் தேர்தல் காலங்களில் களமிறங்குவது வாடிக்கையாக உள்ளது.

இதுபோன்ற தேர்தல் காலத்தில் பெட்டிக்கடை வியாபாரம் போன்று கடை அமைத்து அரசியல் வியாபாரம் செய்வதில் பல குட்டித் தலைவர்கள் ஈடுபட்டுள்ளதாக கூறப்படுகிறது. சித்தாந்தம், கொள்கை, கோட்பாடு இவையெல்லாம் கடைபிடிக்கப்படும் கட்சிகள் மத்தியில் லெட்டர் பேடு பெட்டிக்கடை கட்சிகளும் அதிக அளவில் உற்பத்தியாகி உள்ளன. கொசுக்களைப் போன்று கடிக்கும் இந்த கட்சிகள், வாக்குகளை பிரித்துவிடுமோ என பெரிய கட்சிகள் அஞ்சுகின்றன. அதனால், இந்த கொசு கட்சிகளுக்கும் வாரி இறைக்கின்றனர்.

யார் வேண்டுமானாலும் கட்சி தொடங்கலாம் என்ற நிலை இருப்பதால் ஏகப்பட்ட கட்சிகள் உருவாகி விடுகின்றன. இதனை கட்டுப்படுத்த தேர்தல் ஆணையம்தான் ஒரு விதிமுறையை வகுக்க வேண்டும். அப்படி விதிமுறை வகுத்தால் அதனை பெரிய அரசியல் கட்சிகள் முதலில் கடைபிடிக்க வேண்டும். அப்படியானால் தான் பெட்டிக்கடை போன்ற கட்சிகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியும்.

தேர்தல் தேதியே அறிவிக்கப்படாத நிலையில், சமூகத் தலைவர்களும், பணம் படைத்தவர்களும், புதிய கட்சிகளைத் தொடங்கி, கொடிகளை அறிமுகம் செய்து வருகின்றனர். இதன்மூலம் வரும் தேர்தலில் பெரிய அரசியல் கட்சிகளோடு இணைந்து செயல்பட்டு பணம் சம்பாதிக்கும் வாய்ப்பாகவும், பணத்தை பாதுகாத்துக் கொள்ளும் வழியாகவும் இதை மேற்கொள்கின்றனர். எனவே, கட்சி தொடங்குவதற்கான விதிமுறைகளை ஒழுங்குபடுத்துவதில் தேர்தல் ஆணையம் சீர்திருத்தங்களை மேற்கொண்டால்தான் இதற்கு நிரந்தர தீர்வு கிடைக்கும் என்கின்றனர் சமூக ஆர்வலர்கள்.

# IBS: வெறும் வயிற்றுப் பிரச்சினையா?

## ஹோமியோபதி சொல்லும் புதிய பாதை




பார்க்க முடியாத தொற்றுநோய் இது வெறும் "வயிற்றுப் பிரச்சினை" இல்லை. ஒவ்வொரு காலையும் உங்கள் வயிறு உங்களுக்கு நண்பனாக இருக்குமா அல்லது எதிரியாக இருக்குமா என்று தெரியாமல் எழுவதை கற்பனை செய்து பாருங்கள். உங்களுக்கு ஒரு முக்கியமான ஆலோசனைக் கூட்டம் இருக்கிறது, ஆனால் உங்கள் மனம் முழுவதும் அந்த விளக்கக்காட்சியில் இல்லை; அருகில் இருக்கும் கழிப்பறையிலேயே இருக்கிறது. நண்பர்களுடனான இரவு உணவு அழைப்பை நீங்கள் நிராகரிக்கிறீர்கள், ஏனென்றால் நீங்கள் போக விரும்பவில்லை என்பதற்காக அல்ல, மாறாக அதைத் தொடர்ந்து வரும் வலிமிகுந்த வயிற்றுப்போக்கு மற்றும் அசௌகரியத்திற்கு பயப்படுவதால். உலகளவில் ஏறத்தாழ 7 பேரில் ஒருவருக்கு, இது ஒரு அவ்வப்போது வரும் மோசமான நாள் மட்டுமல்ல இது ஒரு தினசரி யதார்த்தம். இதுதான் எரிச்சல் கொண்ட குடல் நோய்க்குறி (IBS – Irritable bowel syndrome) உடனான வாழ்க்கை.

புள்ளிவிவரங்கள் மிகவும் அதிர்ச்சியளிக்கின்றன: உலகளவில் சுமார் 10–15% மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்தியாவின் பரபரப்பான நகர்ப்புறங்களில், இந்த எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருகிறது. இதற்குக் காரணங்கள் என்ன? வேலையின் இடைவிடாத அழுத்தம், தவிர்க்கப்பட்ட உணவுகள் மற்றும் இரவு நேர உணவுகளின் குழப்பம், மற்றும் நமது ஒளிரும் திரைகளால் நமது தூக்கத்தை அமைதியாகத் திருடுவது. நாம் மன அழுத்தத்தை இயல்பாக்கிவிட்டோம், அவ்வாறு செய்வதன் மூலம், நமது செரிமான அமைப்புகளுக்கு ஒரு சரியான புயலை உருவாக்கிவிட்டோம்.



இந்த உடலின் சமிக்ஞைகளை நாம் அடிக்கடி அலட்சியம் செய்கிறோம். "ஓ, இது வெறும் வாயு தான்," என்று சொல்லி, ஆன்டாசிட் மருந்தை நாடுகிறோம். "ஒருவேளை நான் அதிக மசாலாப் பொருட்களை சாப்பிட்டிருக்கலாம்." நாம் ஒரு நாள்பட்ட நிலையை ஒரு தற்காலிக சிரமமாக குறைத்து மதிப்பிடுகிறோம். ஆனால் IBS ஒரு எளிய "வாயு பிரச்சினை" அல்ல. இது மூளை குடல் இணைப்பின் சிக்கலான, செயல்பாட்டுக் கோளாறு ஆகும், இது அமைதியாக உங்கள் வாழ்க்கைத் தரத்தை சீர்குலைத்து, சாப்பிடும் எளிய, மகிழ்ச்சியான செயலைக் கூட கவலை மற்றும் பயத்தின் மூலமாக மாற்றும். நமது குடலின் கிசுகிசுப்புகளை அவை கூச்சலாக மாறும் முன் புறக்கணிப்பதை நிறுத்த வேண்டிய நேரம் இது.

**வெறுப்பூட்டும் முரண்பாடு:**

"உங்கள் ரிப்போர்ட்கள் நார்மல்தான், ஆனால் எனக்கு மிகவும் மோசமாக இருக்கிறது" IBS-இன் மிகவும் எரிச்சலூட்டும் அம்சம் இதுதான். நீங்கள் பதில்களை எதிர்பார்த்து மருத்துவரிடம் செல்கிறீர்கள். நீங்கள் பல பரிசோதனைகளை மேற்கொள்கிறீர்கள் ஸ்கேன், எண்டோஸ்கோபி, ரத்தப் பரிசோதனைகள். நோயறிதலுக்காக ஆவலுடன் காத்திருக்கிறீர்கள். இறுதியாக, மருத்துவர் வந்து சொல்கிறார், "நல்ல செய்தி! உங்கள் எல்லா அறிக்கைகளும் முற்றிலும் இயல்பானவை. உங்களுக்கு ஒன்றும் பிரச்சினை இல்லை."

ஆனால் நிச்சயமாக ஏதோ பிரச்சினை இருக்கிறது. உங்கள் உடல் உங்களுக்கு வேறு விதமாகச் சொல்கிறது. உங்களை வளைக்க வைக்கும் வயிற்று வலி, திடீரென கழிப்பறைக்கு விரைந்து செல்ல வேண்டிய அவசர உணர்வு, உங்கள் வயிறு பலூன் போல் உப்பிய உணர்வு

பேரா.முனைவர்.கணேஷ் லெட்சுமணன்,



இதுதான் உங்கள் யதார்த்தம். பரிசோதனைகள் சாதாரணமாக இருப்பதற்குக் காரணம், IBS ஒரு கட்டமைப்பு பிரச்சினை அல்ல. கட்டி, புண் அல்லது ஸ்கேன் மூலம் பிடிக்கக்கூடிய வீக்கம் எதுவும் இல்லை. இது ஒரு செயல்பாட்டு பிரச்சினை. இதை ஒரு உயர் செயல்திறன் கொண்ட கணினியில் ஏற்படும் மென்பொருள் குளறுபடி போல் நினைத்துப் பாருங்கள். வன்பொருள் (உங்கள் குடல்) சரியாகத் தெரிகிறது, ஆனால் மென்பொருள் (மூளைகுடல் தகவல்தொடர்பு) தொடர்ந்து செயலிழந்து கொண்டிருக்கிறது.

பிரச்சினையின் மூலக்காரணம், மூளைகுடல் அச்சு என அழைக்கப்படும் சிக்கலான, பரபரப்பான நெடுஞ்சாலையில் உள்ளது. லட்சக்கணக்கான நரம்பு செல்கள் உங்கள் செரிமானப் பாதையில் வரிசையாக அமர்ந்து, உங்கள் மூளையுடன் தொடர்ந்து பேசிக்கொண்டிருக்கின்றன. IBS-இல், இந்தத் தொடர்பு சிதைந்துவிடும். குடல் அதிக உணர்திறன் அடைகிறது. மற்றொரு நபர் கவனிக்காத ஒரு சாதாரண அளவு வாயு கூட, IBS நோயாளியால் கடுமையான, பலவீனப்படுத்தும் வலியாக உணரப்படுகிறது. மூளை மன அழுத்த சமிக்ஞைகளை குடலுக்கு அனுப்புகிறது, இதனால் குடல் சுருங்குகிறது, மெதுவாகிறது அல்லது ஒழுங்கற்ற முறையில் வேகமாக இயங்குகிறது. நீங்கள் உணரும் வலியும் அசௌகரியமும் மிகவும் உண்மையானவை, பரிசோதனைகளில் அவை தெரியாவிட்டாலும் கூட.

**வழக்கமான சிகிச்சையின் சிக்கல் மற்றும் குணமடைவதற்கான ஆழமான பாதை**

வழக்கமான மருத்துவ அணுகுமுறை பெரும்பாலும் அறிகுறி மேலாண்மையின் வெறுப்பூட்டும் சுழற்சியில் சிக்கிக் கொள்கிறது. இது ஒரு கசியும் குழாயில் ஓட்டையை சரி செய்யாமல் பிளாஸ்டர் ஒட்டுவது போன்றது. வலிக்கு ஒரு மாத்திரை. வயிற்றுப்போக்குக்கு இன்னொன்று. மலச்சிக்கலுக்கு வேறொன்று. இது தற்காலிக நிவாரணம் அளிக்கக்கூடும், ஆனால் இது அடிப்படைக் கேள்வியை ஒருபோதும் கவனிப்பதில்லை: ஏன் என் குடல் இவ்வளவு எதிர்வினையாற்றுகிறது? ஏன் என் நரம்பு மண்டலம் தொடர்ந்து எச்சரிக்கை நிலையில் உள்ளது?

இங்குதான் ஒரு முன்னுதாரண மாற்றம் தேவைப்படுகிறது, மேலும் ஹோமியோபதி போன்ற முழுமையான மருத்துவ முறை ஒரு வித்தியாசமான பாதையை வழங்குகிறது. ஹோமியோபதி IBSஐ ஒரே ஒரு சிகிச்சை முறை கொண்ட ஒற்றை நோயாக பார்க்கவில்லை. அது இதை ஒரு தனிநபரின் ஏற்றத்தாழ்வின் தனித்துவமான வெளிப்பாடாக பார்க்கிறது. ஒருவருக்கு, தூண்டுதல் வேலையில் உள்ள செயல்திறன் கவலையாக இருக்கலாம் ஒவ்வொரு விளக்கக்காட்சிக்கு முன்பும் அவர்களின் குடல் பிடித்துக் கொள்கிறது. மற்றொருவருக்கு, அது ஆழமான துக்கமாகவோ அல்லது அவர்கள் ஒருபோதும் வெளிப்படுத்தாத அடக்கப்பட்ட கோபமாகவோ இருக்கலாம். மூன்றாமவருக்கு, இது ஒரு குறிப்பிட்ட உணவு சகிப்புத்தன்மை அல்லது அவர்களின் குடல் தாவரங்களை சீர்குலைத்த நுண்ணுயிர் எதிர்ப்பிகளின் வரலாற்றாக இருக்கலாம்.

உங்கள் அறிகுறிகள் மட்டுமல்ல, உங்கள் அச்சங்கள், உங்கள் உணவுப் பழக்கம், உங்கள் தூக்க முறைகள், உங்கள் உணர்ச்சிகரமான நிலை ஆகியவற்றையும் கேட்பார். தேர்ந்தெடுக்கப்படும் மருந்து IBS என்ற "நோய்க்கு" எதிரானது அல்ல, மாறாக IBS உடன் வாழும் உங்களுக்காக ஆகும். இது உடலின் சுயகட்டுப்பாட்டு வழிமுறைகளுக்கு ஒரு மென்மையான தூண்டுதலாக செயல்பட்டு, மூளைகுடல் அச்சில் நல்லிணக்கத்தை மீட்டெடுக்க உதவுகிறது.

இதனுடன் சேர்ந்து, நமது சொந்த தேர்வுகளின் சக்தியையும் நாம் மீண்டும் பெற வேண்டும். உணவுமுறை அடித்தளமானது, ஆனால் அது தடைசெய்யப்பட்ட உணவுகளின் ஒரு பொதுவான பட்டியல் அல்ல. ஒரு உணவு மற்றும் மனநிலை குறிப்பேடு வைத்திருப்பது, உங்கள் சொந்த உடலின் துப்பறியும் நிபுணராக மாற உதவும். பால் பொருட்களுக்கு எதிர்வினையாற்றுகிறீர்களா? வெங்காயம் மற்றும் பூண்டுக்கு? அதிக பச்சை உணவுகளுக்கு? எளிய வாழ்க்கை முறை மாற்றங்கள் மிகவும் சக்தி வாய்ந்தவை: மெதுவாகவும் கவனத்துடனும் சாப்பிடுதல், போதுமான நீர் குடித்தல், மற்றும் நரம்பு மண்டலத்தை அமைதிப்படுத்த ஆழ்ந்த சுவாசம் அல்லது யோகாவை இணைத்துக் கொள்ளுதல். இவை வெறும் "நல்ல யோசனைகள்"

மட்டுமல்ல; மூளை குடல் இணைப்பை மறுசீரமைப்பதற்கான இன்றியமையாத கருவிகள் இவை.



### உங்கள் வாழ்க்கையை மீண்டும் பெறுதல்

அர்ஜுன் என்று அழைக்கப்படும் ஒரு இளம் மென்பொருள் பொறியாளரின் கதையைச் சொல்கிறேன். பல ஆண்டுகளாக, அவரது வாழ்க்கை அவரது IBS-ஆல் நிர்வகிக்கப்பட்டது. கழிப்பறை இருப்பிடங்களைச் சுற்றி அவர் தனது பயணத்தைத் திட்டமிடுவார். அவர் சாதுவான உணவு மற்றும் பயத்தில் வாழ்ந்தார். அவர் பல சிகிச்சைகளை முயற்சித்தார், ஆனால் நிவாரணம் எப்போதும் தற்காலிகமானதாகவே இருந்தது. அவர் தன்னை உடைந்தவராக உணர்ந்தார், தனது உடல் தனது எதிரி என்று நம்பினார்.

அவர் சிகிச்சைக்கு வந்தபோது, நாங்கள் அவரது குடலை மட்டும் பார்க்கவில்லை. அவரது உயர் அழுத்த வேலை, ஒழுங்கற்ற தூக்கம், மற்றும் அவரது விரக்திகளை அடக்கி வைக்கும் போக்கு ஆகியவற்றையும் பார்த்தோம். அவரது ஹோமியோபதி மருந்து அவரது குறிப்பிட்ட அறிகுறிப் படத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்டது அழுத்தத்தால் நிவாரணம் பெறும் மற்றும் எதிர்பார்ப்பால் தூண்டப்படும் ஒரு வயிற்று வலி. அவரது உணவுமுறையில் பணியாற்றினோம், அதிக கொழுப்புள்ள உணவுகள் அவருக்கு முக்கிய தூண்டுதலாக இருப்பதைக் கண்டறிந்தோம். வேலைக்கு முன் 10 நிமிட தியானப் பயிற்சியைத் தொடங்கினார்.

மாற்றம் ஒரே இரவில் ஏற்படவில்லை, ஆனால் அது நிலையானதாக இருந்தது. முதலில், அவசர உணர்வு குறைந்தது. பின்னர், வயிற்று வலி குறைவாக அடிக்கடி ஏற்பட்டது. சில மாதங்களுக்குப் பிறகு, தனது வயிற்றைப் பற்றி யோசிக்காமல் ஒரு முழு வாரமும் சென்றுவிட்டதை அர்ஜுன் உணர்ந்தார். அவர் இனி தனது குடலுக்குக் கைதியாக இல்லை. அவர் நண்பர்களுடன் சாப்பிடச் சென்றார், வேலைக்காகப் பயணம் செய்தார், மற்றும் தனது வாழ்க்கையை வாழ்ந்தார். இது ஒரு அதிசயம் அல்ல; அவரது உடலுக்கு சரியான கருவிகளையும் சரியான சூழலையும் கொடுத்ததன் விளைவுதான், அது தன்னைத்தானே குணப்படுத்திக் கொள்ள உதவியது.

அர்ஜுனின் கதை ஒரு ஆழமான உண்மைக்குச் சான்றாகும். IBS ஒரு வாழ்நாள் தண்டனையாக இருக்க வேண்டியதில்லை. தேர்வு உங்களுடையது. உங்கள் அடுத்த உணவின் பயத்தில் தொடர்ந்து வாழ விரும்புகிறீர்களா, அல்லது உங்கள் சுதந்திரத்தை மீண்டும் பெற விரும்புகிறீர்களா? உங்கள் உடல் உங்கள் எதிரி அல்ல; ஏதோ சமநிலையில் இல்லை என்பதற்கான சமிக்ஞைகளை அது உங்களுக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறது.

இது உங்களுக்கான செயலுக்கான அழைப்பு. கேட்கத் தொடங்குங்கள். ஒரு குறிப்பேடு வைத்திருங்கள். உங்கள் முழுக் கதையையும் கேட்கும் மருத்துவர்களைத் தேடுங்கள், ஒரு அறிகுறிக்கு மட்டும் மாத்திரை போடுபவர்களை அல்ல. ஆழமான குணமடைதலை நோக்கமாகக் கொண்ட ஹோமியோபதி போன்ற பாதைகளை ஆராயுங்கள். சரியான வழிகாட்டுதல், உங்கள் சொந்த உடலைப் புரிந்துகொள்வதற்கான அர்ப்பணிப்பு மற்றும் ஒரு சிறிய நம்பிக்கையுடன், நீங்கள் உங்கள் குடலுடனான உங்கள் உறவை மாற்றிக்கொள்ளலாம். அதை மீண்டும் நம்ப நீங்கள் கற்றுக்கொள்ளலாம். நீங்கள் வாழ்வதிலிருந்து செழித்து வளர்வதற்கு முன்னேறலாம். நண்பரிடம் உங்கள் குடலிடம் உங்கள் பயணம் இன்றே தொடங்கலாம்.

# When Missiles Replace Diplomacy: Why the U.S.–Iran Conflict Should Worry Us All

By Vijayalakshmi Veeraiyan, Finland

When a powerful nation's military bases are attacked directly, the world must pay attention. The recent confrontation between the United States and Iran is not just another headline from the Middle East. It is a dangerous turning point. Missiles have replaced diplomacy, a long-standing leader has been killed and the risk of a wider war is real. What we are witnessing is not just a regional clash, but a moment that could reshape global politics and affect everyday lives, including here in India.

## What Exactly Has Happened So Far?

The crisis escalated in late February 2026. The United States, along with Israel, launched large-scale air and missile strikes inside Iran. The targets included military bases, weapons facilities and command centers. According to American officials, the goal was to weaken Iran's military strength and stop what they described as a growing threat.

The most dramatic event during these strikes was the killing of Iran's Supreme Leader, Ayatollah Ali Khamenei. He had been Iran's most powerful figure for nearly 40 years. His death was not just symbolic. It removed the central authority of the Iranian political system. In Iran, he was more than a president or prime minister. He was the ultimate decision-maker.

His killing shocked the region. Iran declared national mourning. Crowds gathered in the streets. The emotional impact inside the country was enormous.

Iran did not stay silent. Within days, it launched missiles and drones at U.S. military bases located in Gulf countries such as Bahrain, Qatar, Kuwait and the United Arab Emirates. These bases host American forces and are key parts of U.S. military operations in the region.

This is what makes the situation historic. The




The death of Ayatollah Khamenei could have long-term consequences.

He was the backbone of Iran's political system. For decades, he shaped Iran's foreign policy, especially toward the United States and Israel. With his sudden killing in a foreign strike, Iran faces uncertainty.

When a long-standing leader is killed by external forces, emotions take control. National pride, anger and calls for revenge grow stronger. It becomes politically difficult for leaders to step back and negotiate. Instead, they may feel pressure to respond more aggressively.

There is also the issue of internal stability. Power struggles inside Iran are possible as different groups try to influence the future direction of the country. This uncertainty makes the region more unstable, not less.

The killing of a nation's top leader through military strikes may weaken that country temporarily, but it also creates deep anger and long-lasting hostility. It does not automatically bring peace.

## A Rare and Risky Escalation

One of the most serious aspects of this conflict is Iran's direct attack on U.S. military bases.




The United States is a global superpower with unmatched military reach. For years, tensions between the U.S. and Iran existed through sanctions, proxy conflicts and political threats. But direct missile and drone strikes on American bases cross a new line.

This kind of escalation is risky for both sides. If more American personnel are killed, the U.S. may respond with even stronger force. That could pull more countries into the conflict. Gulf nations that host U.S. bases are already in a difficult position. They may not want war, but their territory is being used in it.

This sets a worrying example. If powerful nations begin attacking each other's military facilities openly, the rules of global restraint weaken.

### How This Affects the World and India

This conflict is not far away from us. Its impact can reach India.

First, oil prices. The Strait of Hormuz, a narrow sea route in the Gulf, carries a large portion of the world's oil supply. If conflict disrupts this route, oil prices rise quickly. India imports much of its oil from the Middle East. Higher oil prices mean higher petrol and diesel prices. This affects transport, food prices and overall inflation.

Second, Indian workers in the Gulf. Millions of Indians live and work in countries like the UAE, Qatar and Kuwait. If the conflict spreads or intensifies, their safety and jobs could be at risk.

Third, trade and shipping. If ships avoid the Gulf region due to security threats, global trade slows down. India's economy which depends on imports and exports could also feel the pressure.

Diplomatically, India faces a balancing act. India has strong strategic ties with the United States. At the same time, it has energy and regional interests connected to Iran. In such a tense environment, India must carefully support peace while protecting its national interests.

### A Dangerous Path Forward

In my view, this conflict represents a dangerous shift in global politics.

Iran's direct attack on U.S. military bases is a bold and risky move that challenges the existing balance of power. At the same time, the killing of Iran's long-standing leader adds emotion and unpredictability to the situation. When pride and anger mix with military power, the results can be explosive.

Every country has the right to defend itself. But when defense turns into continuous retaliation, ordinary people suffer. Civilians lose their lives. Economies weaken. Fear spreads. War is easier to start than to stop.

The world has already seen long and painful conflicts in the Middle East. Another prolonged confrontation would not only harm Iran and the United States. It would affect global markets, diplomacy and daily life in countries far away, including India.

The coming weeks will show whether leaders choose escalation or dialogue. For the sake of global stability, one hopes that diplomacy returns before the cycle of attack and retaliation becomes impossible to control.

Because in today's interconnected world, when missiles fly in the Gulf, their impact is felt everywhere.

# Strike, Shock, and Uncertainty:

# Inside the War That Changed Iran Forever

By AV



## Introduction

The confrontation now unfolding around Iran has quickly become one of the most serious geopolitical crises in recent decades. What had long existed as tension and indirect confrontation between Iran, the United States, and Israel has, in recent weeks, turned into open military conflict, targeted strikes, retaliatory attacks, and widespread international alarm. The reported killing of Iran's Supreme Leader during the first wave of attacks has further intensified uncertainty, leaving observers around the world watching closely to see whether the situation stabilizes or spirals into a wider war. To understand how events reached this point, it is necessary to examine the historical rivalry, recent military developments, internal pressures within Iran, and the wider global implications.

## Historical Background

Hostility between Iran and the United States dates back to 1979, when the Iranian Revolution replaced a Western backed monarchy with an Islamic Republic openly critical of U.S. influence. Since then, mistrust has shaped relations between Tehran and Washington. Disputes over sanctions, regional influence, military presence in the Middle East, and accusations of interference have repeatedly undermined attempts at diplomacy. Over time, the disagreement deepened into a strategic rivalry that influenced conflicts across the region. Israel's tensions with Iran developed along a different but equally serious path.

Israeli leaders have long viewed Iran's nuclear ambitions and missile programs as a direct security threat. For years, Israeli officials warned they might resort to military action if they believed Iran was approaching the capability to build nuclear weapons. Diplomatic efforts to limit Iran's nuclear activity periodically showed promise but ultimately faltered, often over verification rules, sanctions relief, or disagreements about missile development. By early 2026, negotiations had again stalled, leaving the dispute unresolved.


## Domestic Pressures Inside Iran

The external confrontation has coincided with internal strain within Iran. Economic challenges, inflation, and political dissatisfaction sparked protests in several cities toward the end of 2025. Demonstrations grew in size and intensity, reflecting frustration among segments of the population. Security forces responded forcefully in some areas, and reports described deadly crackdowns during January 2026. Communication blackouts and restrictions on internet access were also imposed, limiting information flow both within the country and to the outside world.

Such domestic unrest did not directly cause the international conflict, but it created an atmosphere of instability. Governments facing internal dissent sometimes adopt stronger external postures, and analysts note that internal pressures can shape decision making during crises. By February 2026, Iran was confronting both domestic tension and mounting international suspicion regarding its nuclear program.

## The Immediate Trigger

The situation shifted dramatically when intelli-



gence assessments concluded that Iran had significantly advanced its uranium enrichment activities. According to officials involved in monitoring nuclear proliferation, the progress suggested the possibility of weapons grade capability if left unchecked. In response, the United States and Israel launched coordinated strikes on February 28, 2026, targeting nuclear related facilities and military installations in multiple locations. The operation involved advanced aircraft, long range missiles, and precision guided weapons. Strategic sites associated with enrichment, research, and command structures were reportedly hit during the opening phase. Supporters of the action argued that it was a preventive measure intended to stop a potential nuclear threat before it materialized. Critics, however, warned that such strikes risked igniting exactly the kind of regional war they were meant to prevent.

## Leadership Decapitation Strike

One of the most consequential developments occurred during the initial attacks: the death of Iran's Supreme Leader, Ayatollah Ali Khamenei. Reports indicate that he was killed in a targeted strike on a leadership compound in Tehran. Confirmation of his death came shortly afterward, sending shock waves through Iran's political system and across the international community.

As Supreme Leader, Khamenei had occupied the highest authority in Iran for decades. His role combined religious influence with ultimate control over state institutions, including the military and judiciary. The removal of such a central figure is historically rare and carries unpredictable consequences. Political analysts warn that it could weaken the existing power structure, while others argue it might consolidate authority among hardline factions determined to respond forcefully.

## Continuing Military Operations

The initial strikes did not end the fighting. Additional attacks were reported on public infrastructure and military targets with several reported civilian casualties. Officials indicated that operations would continue as long as they deemed necessary to eliminate threats. Iran responded by launching missiles toward Israeli territory and targeting facilities associated with U.S. forces in parts of the Gulf region. Explosions were reported in several gulf cities hosting foreign military installations, highlighting the conflict's widening geographic scope. These exchanges demonstrate that the confrontation is no longer limited to a single strike or retaliation. Instead, it has taken on the characteristics of an ongoing military campaign, with both sides signaling readiness to continue if provoked. The possibility of miscalculation or unintended escalation remains a major concern for diplomats and defense analysts alike.

## International Reaction

Global responses have ranged from support to alarm. Some governments emphasized Israel's right to defend itself, while others urged restraint and warned against escalation. International organizations called for immediate deescalation, stressing the risks of civilian casualties and regional destabilization. Demonstrations have taken place in several countries, reflecting how the conflict resonates far beyond the immediate battlefield. Financial markets and energy sectors reacted quickly to the news. Investors often respond to geopolitical instability by shifting assets, and the outbreak of hostilities in a region central to global energy supply triggered volatility. The longer the conflict continues, the greater the likelihood of broader economic consequences.

## Prospects for Regime Change

The death of a long serving leader inevitably raises questions about succession. Iran's political system includes mechanisms for selecting a new Supreme Leader, but the process can be complex, particularly during wartime. Different factions within the political and religious establishment may compete for influence, and the outcome is uncertain. Some observers speculate that prolonged instability could lead to significant political transformation, while others expect continuity under a new leader drawn from the existing hierarchy. It is important to note that the fall of a single leader does not automatically mean the collapse of a state. Iran retains established institutions, armed forces, and administrative structures. Nevertheless, leadership transitions during conflict are inherently delicate and can affect both domestic policy and foreign relations.

## Strait of Hormuz & it's Strategic Importance

Among the most closely watched factors in the crisis is the Strait of Hormuz, a narrow waterway linking the Persian Gulf to the open ocean. A substantial portion of the world's oil shipments passes through this route each day. Because of its strategic position, any disruption there would have immediate global repercussions.

Iran has previously indicated that it could restrict traffic through the strait if confronted militarily. Even

the threat of such action can influence energy prices, insurance rates for shipping, and international trade calculations. A full closure, which is very likely, would cause sharp increases in oil prices, strain supply chains, and place pressure on economies dependent on imported fuel. For this reason, many governments are monitoring naval movements in the region as closely as they are watching events on land.

## Broader Economic and Security Implications

Beyond energy markets, the conflict carries wider risks. Regional alliances could draw additional countries into the confrontation, especially now that the attacks have extend beyond regional targets. Armed groups aligned with Iran in various parts of the Middle East might also become involved, opening new fronts and complicating efforts to contain hostilities.

There is also concern about nuclear proliferation. If nuclear facilities are damaged but not destroyed, or if Iran concludes that deterrence is necessary for survival, it could accelerate efforts to develop weapons capability. Such a scenario would likely intensify international tensions and could prompt neighboring states to reconsider their own defense strategies.

Humanitarian considerations are equally significant. Military strikes on infrastructure can disrupt electricity, water supply, and medical services. Even when attacks are aimed at strategic targets, civilians often bear direct consequences. Relief organizations have already begun preparing for potential displacement and refugee flows as the conflict intensifies.

## Military Balance

The forces involved in the confrontation differ greatly in structure and capability. The United States and Israel possess advanced technology, stealth aircraft, and extensive surveillance networks, giving them advantages in precision and intelligence. Iran, however, has invested heavily in missile systems, drones, and asymmetric tactics designed to offset technological disparities. Its ability to influence regional actors and disrupt maritime traffic provides additional leverage.

Because of these contrasting strengths, analysts beckon the need for strategic patience. Conflicts in which one side relies on unconventional methods can persist even when facing technologically superior opponents. The outcome often depends not only on battlefield results but also on political decisions and international pressure.




## Possible Paths Forward

Several scenarios could shape the next phase of events. Diplomatic mediation might lead to a ceasefire or temporary pause, especially if outside powers push for negotiations. Alternatively, retaliatory strikes could intensify, widening the conflict. A third possibility is a prolonged standoff marked by intermittent attacks but no decisive outcome. Each scenario carries different implications for regional stability and global markets.

The coming weeks are going to be extremely tense and critical. Leadership decisions, military calculations, and diplomatic initiatives will all influence whether tensions ease or escalate. History shows that conflicts sparked by preventive strikes can evolve in unpredictable ways, making careful diplomacy need of the hour.

## Conclusion

The present confrontation with Iran did not emerge suddenly; it is the result of decades of mistrust, rivalry, and unresolved disputes. The latest round of strikes and counterstrikes represents a dramatic escalation, transforming a longstanding standoff into open conflict. The reported death of Iran's Supreme Leader has added another layer of uncertainty, raising questions about succession, stability, and future policy direction.

At the same time, the crisis extends far beyond one country or region. Energy routes, global markets, diplomatic alliances, and security calculations are all affected. The Strait of Hormuz alone illustrates how a localized conflict can have worldwide consequences. Whether the situation stabilizes through negotiation or expands into a broader war will depend on decisions made by leaders in multiple capitals in the days ahead. For now, the conflict remains fluid. Developments are unfolding rapidly every hour, and the international community continues to watch with bated breath, aware that the stakes involve not only regional power balances but also the wider stability of the global system.




@PHONE APP

@WEBSITE

@YOUTUBE

@INSTAGRAM

THAKKAAR KURAL, English & Tamil Monthly, PRGI Registration No: TNBIL/25/A2396




Published by S Esuf Basha, Printed Ali Mohamed Sayeed, Published at No.4, Pandiyan Street, Avvai Nagar, Thiruvanmiyur, Chennai - 600 041, Printed at J.M.Process No.29, V.N.Dass Road , Border Thottam, Mount Road, Chennai-600002, Editor. S.Esuf Basha